பக்கங்கள்: பன்னிரண்டு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 7.00

சுடர்17 வள்ளுவர் ஆண்டு 2033 ஆவணி 12 புதன்கிழமை (28-08-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:274

## வடக்கு – கிழக்கு புனரமைப்புப் பணிக்கு ஆசிய வங்கி ரூ.400 கோடி ஒதுக்கீடு

### திட்டமிடல் ஆலோசகர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஓக.28

வடக்கு - கிழக்குப் பிரதேசங்களில் உடனடிப் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்கென ஆசிய அபிவிருத்தி வங்கி 400 கோடி ரூபாவை வழங்கவுள்ளது. இதில் 40 கோடி ரூபா யாழ்மாவட்டத்தில் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்கென ஒதுக்கப்பட்டுள்ளது.

- இவ்வாறு ஆசிய அபிவிருத்தி வங்கியின் திட்டமிடல் ஆலோசகர் எம். திருச்செல்வம் தெரிவித்தார்.

நேற்று யாழ்ப்பாணம் வந்த ஆசிய அபிவிருத்தி வங்கிக் குழுவினர் இங்கு மேற்கொள்ளப்பட வேண்டிய புனரமைப்புப் பணிகள் குறித்து ஆராய்ந்தனர்.

யாழ்கல்வி வலயத்தில் பாடசாலை அதிபர்களைச் சந்தித்து அவர்கள் பேசினர். கடந்தகால யுத்தத்தினால் சேதமடைந்த பாடசாலைகளை அவசர புனரமைப்புத் திட்டத்தின் கீழ் மீளக்கட்டியெழுப்புவது குறித்து அங்கு ஆராயப்பட்டது. யாழ்குடாநாட்டில் சேதமடைந்த பாடசாலைகள் மற்றும் அவற்றில் மேற்கொள்ளப்பட வேண்டிய புனரமைப்புப் பணிகள் என்பன தொடர்பான விவரங்களைப் பெற்றுக்கொண்டனர். புதிய கல்விச் சீர்திருத்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பாகவும்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## உண்ணாவிரதப் போருக்கு தமிழ்க் கைதிகள் முஸ்தீபு!

கொழும்பு,ஓக.28

களுத்துறை சிறையில் இருக்கும் தமிழ் இளைஞர்கள் அடுத்த முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை முதல மீண்டும் ஒருதடவை சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தை அறிவித்துள்ளனர்.

கடந்த ஜூலை மாதம் 25 ஆம் திகதி அமைச்சர் பி.சந்திரசேகரன், ரெலோ பிரமுகர் சட்டத்தரணி ஸ்ரீகாந்தா ஆகியோர் இரண்டு வாரத்தில் சகலரின் விடுதலை தொடர்பாகவும் சாதகமான முடிவை பெற்றுத் தருவதாகக் கூறி எமது சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை இடைநிறுத்தச் செய்தனர். ஆனால் இவர்கள் கூறியவாறு எதுவும் நடைபெறவில்லை.

இதுவரைக்கும் ஒரு சிலரே விடுதலை செய்யப்பட்டுள்ளனர். எனவே தொடர்ந்தும் எமது விடுதலையில் எமக்கு நம்பிக்கையற்ற நிலை தோன்றியுள்ளது. இதனால் மீண்டும் எமது போராட்டத்தை ஆரம்பிக்க வேண்டிய இக்கட்டான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம் - என கைதிகள் தெரிவித்துள்ளனர். (ம)

### விளக்கமறியல்

மட்டக்களப்பு,ஓக.28

பதினொரு வயதுச் சிறுமியை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்த முயன்ற சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட இளைப்பாறிய ஆசிரியர் ஒருவரை விளக்கமறியலில் வைக்கும்படி மட்டக்களப்பு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

வீட்டுவேலைக்குச் சென்றுவரும்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# பேச்சு நடக்கட்டும் எதிர்ப்பில்லை ஆனால் மூடுமந்திரம் வேண்டாம்

## விவரங்களை வெளியிடவேண்டும் என்பதே எதிரணி நிலைப்பாடு

கொழும்பு,ஓகஸ்ட்28

**அரசுக்கும் புலிகள் இயக்கத்திற்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படுவது நல்ல விடயம். அதனை நாங்கள் எதிர்க்கவில்லை; வரவேற்கின்றோம். ஆனால், மூடுமந்திரமாக பேச்சு நடக்கக் கூடாது. பேச்சுத் தொடர்பான சகல விடயங்களும் நாட்டுக்கும் மக்களுக்கும் அப்பட்டமாகத் தெரியக்கூடியதாக இருக்கவேண்டும் என்பதே எதிர்க்கட்சியின் கருத்தாகும்.**

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் ஊடகப் பேச்சாளரும் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சரத் அமுனுகம இவ்வாறு தெரிவித்திருக்கின்றார்.

சமாதானப் பேச்சுக்களுக்கு முன அரசு, புலிகள் மீதான தடையை நீக்கி விட்டு, பேச்சுக்கள் தோல்வியடையுமேயானால் அத்தடை மீண்டும் அமு

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் வடக்கு மீனவர்கள் கைதாகும் சூழ்நிலை

### விசேட வர்த்தமானி பிரமாணங்களின் வடிவில் வந்துள்ள ஆபத்து

மீன்பிடிக்கக் கடலில் இறங்கும் வட பகுதி மீனவர்கள் புரிந்துணர்வு உடன்படிக்கையின் சரத்து 2.12 இற்கு முரணாக பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு தண்டிக்கப்படும் ஆபத்து ஏற்பட்டிருக்கிறது.

பயங்கரவாதத் தடுப்புச்சட்டத்தின 27 ஆவது சரத்தின் கீழ் பாதுகாப்பு அமைச்சர் ஆக்கிய சட்டப்பிரமாணங்களின்படி, மீனவர்களோ, வேறு எவரோ மட்டுப்படுத்தப்பட்ட கடல் பகுதிகளுக்குள் தகுதிவாய்ந்த அதிகாரியின் அனுமதியின்றிச் சென்றால் அவர்கள் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு தண்டனைக்கு உடபடுத்தப்படுவார்கள்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் எவரும் கைதுசெய்யப்படமாட்டார்கள் என்று புரிந்துணர்வு உடன்படிக்கையில் சரத்து 2.12 இல் திட்டவட்டமாகத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

"மட்டுப்படுத்தப்பட்ட கடல் பரப்புகள் ஒழுங்குவிதிகள்" என்ற தலைப்பில் இச்சட்டப்பிரமாணங்கள் இலக்கம் 1237/20 கடந்த மே23 ஆம் திகதி அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

சட்டப்பிரமாணங்கள் அப்போது

(12 ஆம் பக்கம் பார்க்க)

## நாரந்தனை தாக்குதல் சம்பவம்: 3 ஆவது சந்தேகநபரும் பிணையில் விடுவிப்பு!

யாழ்ப்பாணம்,ஓக.28

கடந்த பொதுத்தேர்தல் காலத்தில் நாரந்தனையில் தமிழ்க் கூட்டமைப்பு வேட்பாளர்கள்மீது நடத்தப்பட்ட மிலேச்சத்தனமான தாக்குதல் தொடர்பாகக் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த மூன்றாவது சந்தேகநபரும் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

இந்த வழக்கில் முதலாவது எதிரியாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள ஈ.பி.டி.பி. உறுப்பினர் ஜீவன் என்பவரே நேற்றுமுன்தினம் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

வவுனியா மேல் நீதிமன்றம் வழங்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சமாதானத்துக்கான முயற்சிகளை உறுதியாக முன்னெடுக்கக் கோருகிறார் கொழும்பு ஆயர்

கொழும்பு,ஓக.28

சமாதான முயற்சிகளை உறுதியாக முன்னெடுத்துச் செல்லுமாறு கொழும்பு பேராயர் ஒஸ்வல்ட் கோமிஸ ஆண்டகை, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை கேட்டுக்கொண்டார். சமாதானத்தைத் தோற்றுவிக்கும் நடவடிக்கைக்குத் தமது பூரண ஆசீர்வாதம் உண்டு எனவும் அவர் கூறினார்.

பிரதமர் நேற்று முற்பகல் பேராயர் இல்லத்தில் பேராயரைச் சந்தித்தார்.

அரசின் சமாதான நடவடிக்கைகளின் இன்றைய நிலையைப் பிரதமர் ரணில், பேராயர் கோமிஸிடம் எடுத்து விளக்கினார். நாட்டில் புதிய அரசியல் கலாசாரத்தைத் தோற்றுவிக்க அரசு மேற்கொள்ளவிருக்கும் நடவடிக்கைகள் எவை என்பதையும் பிரதமர் விவரித்தார்.

நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவிருக்கும் பாடசாலைகள் அபிவிருத்திச் சட்டமூலம் குறித்து பேராயரும் பிரதமரும் பேச்சு நடத்தினர்.

சமாதானம், கல்வி, சுகாதாரம் போன்ற தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள் குறித்து ஐக்கியப்பட்ட கொள்கையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதை பேராயர் வலியுறுத்தினார்.

கட்டுநாயக்க விமான நிலையத்தை விஸ்தரிப்பது தொடர்பாக ஆரம்பமதிப்பீடுகள் நடைபெற்று வருவதாகவும்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அரசமைப்புத் திருத்தம் இன்று அமைச்சரவையில்!

கொழும்பு,ஓக.28

நாடாளுமன்றத்தை கலைப்பது தொடர்பான ஜனாதிபதியின் அதிகாரங்களை வெட்டுவதற்கு வழி செய்யும் அரசமைப்பின் 18ஆவது திருத்தநகல் இன்று அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படவிருக்கின்றது.

அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் வெளிநாடு சென்றிருப்பதால், நிதியமைச்சர் கே.என். சொக்ஸி இந்த அரசமைப்புத் திருத்த நகலை இன்று அமைச்சரவையில் சமர்ப்பிப்பார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## நல்லிரவுவேளை நகரில் மக்கள் மீது தாக்குதல்!

யாழ்ப்பாணம்,ஓக.28

யாழ்நகரின் இரண்டாம் குறுக்குத தெருப் பகுதியில் நேற்றுநள்ளிரவு இடம்பெற்ற சம்பவம் ஒன்றைத் தொடர்ந்து அங்கு விரைந்த பொலீஸார் பொதுமக்களைத் தாக்கியதாகக் கூறப்படுகிறது. இது குறித்து போர்நிறுத்த கண்காணிப்புக்குழு அலுவலகத்திலும் பாதிக்கப்பட்டவர்களால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

நள்ளிரவு பன்னிரண்டு மணியளவில் இரண்டாம் குறுக்குத்தெருவில் கடற்கரையை அண்டிய பகுதியில் வசிக்கும் குடும்பப் பெண் ஒருவருடன் அடையாளம் தெரியாத நபர் ஒருவர் தவறாக நடக்க முயன்றதாகவும் -

அதனை அடுத்து அந்தப் பெண் உரத்து அடைந்து கூக்குரலிட்டதில் அங்கு கூடிய அயலவர்கள் அந்த நபரை நையப்புடைத்ததாகவும் -

சம்பந்தப்பட்டவர்களால் தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் நடந்த சிறிது நேரத்தில் அங்கு விரைந்த பொலீஸார் தங்களை தாக்கியதாக பொதுமக்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. அத்துடன் பொலீஸார் ஆறு பொதுமக்களைக் கைது செய்து யாழ்பொலீஸ் நிலையத்துக்கு

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தாய்லாந்து பேச்சு ஆரம்பமாவதற்குமுன் தடைநீக்கப்படுவது அவசியமற்றதாகும்

### பத்திரிகையாளர் மாநாட்டில் சமயத்தலைவர்கள் கருத்து

கொழும்பு,ஓக.28

சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பமாவதற்கு முன் விடுதலைப் புலிகளின் மீதான தடை நீக்கப்படுவதை தாங்கள் எதிர்ப்பதாக சமயத் தலைவர்கள் சிலர் கூறுகின்றனர்.

நேற்றுக் கொழும்பில் தாங்கள் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் அவர்கள் இதனைத் தெரிவித்துள்ளனர்.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்தில் தாய்லாந்தில் ஆரம்பமாவது சமாதானப் பேச்சுக்கள் அல்ல. சமாதானப் பேச்சுக்களுக்கான நிகழ்ச்சிநிரலைத் தயாரிக்கும் பேச்சுக்களே.

அரசும் புலிகள் இயக்கமும், புலிகள் இயக்கம் மீதான தடை இருக்கையிலேயே யுத்தநிறுத்த ஒப்பந்தத்தைச் செய்துகொண்டன. அதேபோன்று தடை நடைமுறையில் இருக்க ஏன் பேச்சு நடத்தக்கூடாது. எனவே, தாய்லாந்துப் பேச்சுக்கள் ஆரம்பமாவதற்கு முன் புலிகள் இயக்கத் தடை நீக்கப்படுவது அவசியமற்றதாகும்.

- இவ்வாறு அவர்கள் பத்திரிகையாளர் மாநாட்டில் கூறினர். பௌத்த, இந்து, கத்தோலிக்க, முஸ்லிம் சமயத் தலைவர்கள் சிலர் இம்மாநாட்டில் கலந்துகொண்டனர்.

இருதரப்பினருக்கும் இடையே சமாதானப் பேச்சுக்கள் எப்பொழுது ஆரம

(12 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# விளையாட்டு

## ஃபிளின்டொவ்வுக்கு சத்திரசிகிச்சை

இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் இளம் சகல துறை வீரர் அன்ரூ ஃபிளின்டொவ் ஹேர்னியா உபாதையினால் பாதிக்கப்பட்டுள்ளார். இவ்வாரம் அவருக்குச் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்படவுள்ளது.

இதனால் இந்திய அணியுடனான நான்காவது டெஸ்ட் போட்டி மற்றும் இலங்கையில் நடைபெறவுள்ள ஐ.சி.சி. சம்பியன்சிப் போட்டி ஆகியவற்றில் ஃபிளின்டொவ் பங்குபற்ற முடியாதுள்ளார்.

இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான டெஸ்ட் தொடரில் இரு அணிகளும் 1-1 விகிதத்தில் உள்ளன. தொடரில் வெற்றியைத் தீர்மானிக்கும் இறுதிப்போட்டி எதிர்வரும் 5 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

"இந்நிலையில், ஃபிளின்டொவ் போட்டியில் பங்குபற்ற முடியாதுள்ளமை இங்கிலாந்து அணிக்கு மேலும் நெருக்கடியை ஏற்படுத்தும்."

- இவ்வாறு இங்கிலாந்து அணியின் பயிற்றுநர் டங்கன் பிளெட்சர் கூறியுள்ளார்.

இந்த டெஸ்ட் தொடரில் இங்கிலாந்து அணியின் முன்னணி வீரர்களான மார்க்கஸ் ரெஸ்கொதிக், டெரன் கொவ் ஆகியோர் இடம்பெறவில்லை. கிரஹம் தோர்ப் தற்காலிக ஓய்வில் உள்ளார்.

இதேவேளை,

கிரேக் வைட்டும் உபாதைக்குள்ளாகியுள்ளார். இதனால் 4ஆவது போட்டிக்கு மற்றொரு சகலதுறை வீரரைத் தேடவேண்டிய நிலையில் இங்கிலாந்து அணி உள்ளது. (ம)

## ஆஸ்திரேலிய அணிக்கு அலன் போர்டர் பயிற்றுநர்

கென்யாவில் முக்கோண ஒரு நாள் சுற்றுப்போட்டியில் பங்குபற்றவுள்ள ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணிக்கு அலன் போர்டர் பயிற்றுநராகப் பொறுப்பேற்றுள்ளார்.

இச்சுற்றுப்போட்டி நாளை வியாழக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

ஆஸி.அணியின் பயிற்றுநர் ஜோன் புச்சானனுக்கு முதுகுவலி ஏற்பட்டுள்ளது. அவர் குணமடைவதற்கு 10 நாள்கள் செல்லும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் அலன் போர்டர் பயிற்றுநராகப் பொறுப்பேற்குமாறு இறுதி நிமிடத்தில் கோரப்பட்டார். இக்கோரிக்கையை போர்டர் ஏற்றுக்கொண்டுள்ளார்.

47 வயதான அலன் போர்டர் 1987 உலகக் கிண்ணத்தை வென்ற ஆஸி. அணிக்குத் தலைமை தாங்கியவர். 156 டெஸ்ட் போட்டிகளிலும் பங்குபற்றி 11,174 ஓட்டங்களைக் குவித்தவர்.

தற்போது ஆஸி தேர்வுக்குழு உறுப்பினராகக் கடமையாற்றுகிறார். தென்னாபிரிக்க 'ஏ' அணியுடன் 7 ஒரு நாள் போட்டிகளில் பங்குபற்றவுள்ள ஆஸி 'ஏ' அணியின் பயிற்றுநராக போர்டர் நியமிக்கப்பட்டிருந்தார்.

நேற்று ஆஸி 'ஏ' அணி தென்னாபிரிக்காவுக்குப் புறப்பட்டது. இதேவேளை, ரிக்கி பொன்ரிங் தலைமையிலான ஆஸி சிரேஷ்ட அணி நேற்று கென்யாவுக்கு புறப்பட்டது.

49 வயதான புச்சானன் 1999இல் ஆஸி. அணியின் பயிற்றுநராக பொறுப்பேற்றார். அவ்வணி தொடர்ச்சியாக 15 டெஸ்ட் போட்டிகளிலும் 14 ஒருநாள் போட்டிகளிலும் வெற்றிபெற்று உலக சாதனைகளைப் படைப்பதற்கு பின்னணியில் இருந்தவர் புச்சானன் என்பது குறிப்பிடத்தக்கது.

## அமெரிக்கப் பகிரங்க டெனிஸ் தொடர் இரண்டாவது சுற்றுக்கு செரீனா தகுதி

அமெரிக்கப் பகிரங்கப் போட்டிகளின் மகளிர் ஒற்றையர் பிரிவில் தரவரிசையில் முதல்நிலையிலுள்ள செரீனா வில்லியம்ஸ் இரண்டாவது சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ளார்.

முதல்சுற்றில் அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ் மற்றொரு அமெரிக்க வீராங்கனையான கொரினா மொறாரியுவை 6-2, 6-3 என்ற விகிதத்தில் தோற்கடித்தார்.

1999 இல் இச்சுற்றுப்போட்டியில் சாம்பியனாகியவர் செரீனா. கடந்த வருடம் இறுதிப் போட்டியில் தனது மூத்த சகோதரி வீனஸ் வில்லியம்ஸிடம் தோல்வியுற்றார்.

இவ்வருடம் பிரெஞ்சுப் பகிரங்கத் தொடர், விம்பிள்டன் தொடர் ஆகியவற்றில் செரீனா சம்பியனானார்.

அமெரிக்கப் பகிரங்கத் தொடரிலும் சம்பியனாகித் தொடர்ச்சியாக மூன்று கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில சம்பியனாகிய வீராங்கனை என்ற பெருமைக்குரியவராகுவதற்கு செரீனா முயற்சிக்கின்றார்.

இறுதியாக 1996இல் ஜேர்மன் வீராங்கனை ஸ்டெபிகிராப் இச்சாதனையைப் புரிந்திருந்தார். (ம)

## பாடசாலைக் கால்பந்தாட்டத்தில் தென்கொரிய அணி சம்பியன்

30ஆவது ஆசிய பாடசாலைகள் கால்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் தென்கொரிய அணி சம்பியனாகியுள்ளது. சிங்கப்பூரில் இச்சுற்றுப்போட்டி நடைபெற்றது. இலங்கை உட்பட 10 நாடுகள் இப்போட்டிகளில் பங்குபற்றின.

இறுதிப்போட்டி நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இப்போட்டியில் தென்கொரிய அணி தாய்லாந்து அணியை 3-2 கோல்களால் தோற்கடித்தது.

மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியின் 2ஆவது நிமிடத்தில் தென்கொரிய வீரர் லீஹுயுன்ஜின் முதலாவது கோலை அடித்தார்.

10ஆவது நிமிடத்தில் தாய்லாந்து வீரர் சியன் சூக் 30 மீற்றர் தூரத்திலிருந்து கோல் ஒன்றை அடித்தார்.

இரு நிமிடங்களின் பின் தென்கொரிய வீரர் லீஹாயுன் மினி கோலொன்றைப் புகுத்தினார். இடைவேளையின போது தென்கொரியா 2-1 விகிதத்தில் முன்னணியில் இருந்தது.

இடைவேளையின் பின் 22 ஆவது நிமிடத்தில் தாய்லாந்து வீரர் நொன் கொன் அடித்த கோலினால் இரு அணிகளும் சமநிலைப்படைந்தன. ஆனால், போட்டி முடிவடைவதற்கு ஒரு நிமிடம் இருந்தபோது தென்கொரியாவின் அன் சியோங் கோல் அடித்து தமது அணியின் வெற்றியை உறுதிப்படுத்தினார்.

ஆசிய பாடசாலைக் கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டிகளில் 8ஆவது தடவையாகத் தென்கொரியா சம்பியனாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## இன்றைய நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஒக.28

புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழகம் மின்னொளியில் நடத்தும் 'செற்அப், ஓவர் கேம்' முறையிலான கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று புதன்கிழமை கலைமதி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:

☆ இரவு 8 மணி - யாழ். பல்கலைக்கழக வி.க. எதிர் அரியாலை ஐக்கிய வி.க. (செற்அப்)

☆ இரவு 8.30 மணி - உடுப்பிட்டி குணசேகரா வி.க. எதிர் தொண்டமனாறு கலைவாணி வி.க. (ஓவர் கேம்) (ம-ரி)

★ ★ ★

யாழ்மாவட்ட தாச்சிச் சங்கத்தின் அனுசரணையுடன் அரியாலை காந்தி சனசமூக நிலைய விளையாட்டுக் கழகம் நடத்தும் தாச்சிச் சுற்றுப் போட்டியில் இன்று புதன்கிழமை பிற்பகல் 4 மணிக்கு காந்தி விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டத்தில் இணுவில் கலாஜோதி வி.கழகமும் சண்டிலிப்பாய் சிவசக்தி வி.கழகமும் பங்குபற்றுகின்றன. (ம-86-ரி)

(ரப்பர் கூட்டுத்தாபனத்துக்கு ரூ.54 கோடி வழங்கிய விவகாரம்)

# முன்னாள் பிரதமரிடமும் ஜனாதிபதியிடமும் காரணங்கள் கேட்டறிவது பற்றி ஆராய்வு

கொழும்பு,ஒக.28

கடந்த ஆட்சியின்போது ரப்பர் கூட்டுத்தாபனத்துக்கு திறைசேரியினால வழங்கப்பட்ட 54 கோடி ரூபாவுக்கு மேற்பட்ட பணம் என்னவாயிற்று என்பதைக் கண்டறியும் விசாரணையைத் தொடர வேண்டுமானால் அன்று பெருந்தோட்ட அமைச்சராக இருந்த முன்னாள் பிரதமர் விசாரிக்கப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அப்பணத்தை வழங்க அமைச்சரவைப் பத்திரம் ஒன்றைச் சமர்ப்பித்த ஜனாதிபதியிடமும் காரணங்கள் கேட்டறியப்பட வேண்டும் என்றும் கூறப்பட்டிருக்கிறது.

இவ்விசாரணையை மேற்கொள்ளும் இரகசியப் பொலீஸார் உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்கவிடம் இவற்றைத் தெரிவித்திருக்கின்றனர்.

ஐ.தே.முன்னணி அரசு பதவியேற்ற பின்னர் ரப்பர் கூட்டுத்தாபனத்துக்கு பணம் வழங்கப்பட்ட விடயம் குறித்து சி.ஐ.டி. பொலீஸாரால் விசாரணை ஆரம்பிக்கப்பட்டது. (ம)

### மாகாணமட்ட தமிழ்மொழித் தினம்

வடக்கு - கிழக்கு மாகாணத் தமிழ்மொழித் தினம் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 2ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு வவுனியா நகரசபை திறந்தவெளி அரங்கில் நடைபெறவுள்ளது.

மாகாணக் கல்விப்பணிப்பாளர் ஐ.எம்.இஸ்ஸதீன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் வடக்கு - கிழக்கு மாகாண தலைமைச் செயலாளர் ஜீ.கிருஷ்ணமூர்த்தி பிரதம விருந்தினராக கலந்துகொள்ளவுள்ளார்.

தமிழ்மொழித் தினப் போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில் வழங்கும் வைபவமும் தொடர்ந்து கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

## கண்ணி அகற்றும் பணிகள் வன்னியில் மீண்டும் ஆரம்பம்

கிளிநொச்சி,ஒக.28

வன்னி பெருநிலப்பரப்பில் கண்ணி அகற்றும் பணியை மனிதநேய கண்ணி அகற்றும் பிரிவினர் மீண்டும் நேற்று ஆரம்பித்துள்ளனர்.

பிரிட்டன், நோர்வே ஆகிய நாடுகளைச் சேர்ந்த நிபுணர்குழு ஒன்று வன்னியில் இந்தப் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கு கண்ணி அகற்றும் பணியை நவீன முறையில் மேற்கொள்வது தொடர்பான பயிற்சிகளை அளித்துவந்தது.

இதன் காரணமாக கடந்த சில வாரங்களாக இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்த கண்ணி அகற்றும் பணி மீண்டும் நேற்று கிளிநொச்சி, பளைப் பகுதிகளில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச நிறுவனங்கள் வழங்கிய நவீனசாதனங்களைக் கொண்டு நவீன முறையில் இந்தப் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தற்சமயம் இந்தப் பணியில் நூற்றியம்பது தொண்டர்கள் ஈடுபடுத்தப்படுவதாகவும் -

விரைவில் இந்தப்பணியில் அறுநூறு தொண்டர்கள் ஈடுபடுத்தப்படவிருப்பதாகவும் - அப்பிரிவின் பொறுப்பாளர் பி.யோகன் தெரிவித்தார். (ம-3)

## 'சுடர் ஒளி' குறித்து ஜே.வி.பி. நாடாளுமன்றில் நேற்று சர்ச்சை!

'சுடர் ஒளி' பத்திரிகை குறித்து ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ நேற்று சபையில் சர்ச்சை கிளப்பினார்.

நேற்றுக்காலை நாடாளுமன்றத்தில பாதுகாப்பு அமைச்சரிடம் புலிகள் தொடர்பான கேள்வி ஒன்றை அவர் எழுப்பினார். அப்போதே 'சுடர் ஒளி' குறித்தும் அவர் காட்டமாகக் கருத்துத் தெரிவித்தார்.

"தற்போது வடக்கு - கிழக்கு மாகாணங்களில் புலிகளின் நிர்வாகமே நடைபெறுகின்றது. அங்கு நாட்டின் இறைமைக்குப் பாதிப்பு ஏற்படும் வகையில் இறைவரிக் கட்டளைகள் மீறப்பட்டுள்ளன. கிராமங்களில் வங்கிகள் திறக்கப்படுகின்றன. அங்கே கோடிக்கணக்கான ரூபா சேமிப்பில் இடப்பட்டுள்ளது. இந்த வங்கிகளின் வருமானம் அரச வங்கிகளின் வருமானத்தைவிடப் பன்மடங்கு அதிகமாகும். இது இறைவரிச் சட்டத்தை மீறும் ஒரு செயல் இல்லையா? அதேவேளை புலிகள் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உற்பத்தியாகும் பொருள்களுக்கும், விற்பனை செய்யப்படும் பொருள்களுக்கும் 5 வீதம் முதல் 25 வீதம் வரை வரிகள் அறவிடுகின்றனர்.

தேசியப் பத்திரிகையான 'சுடர் ஒளி' பெரிய விளம்பரம் போன்று இச்செய்தியைப் பிரசுரித்துள்ளது.

"இப்பத்திரிகை அரசால் பதிவு செய்யப்பட்ட ஒரு பத்திரிகை என்பதை பாதுகாப்பு அமைச்சர் அறியவில்லையா? இது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சர் என்ன நடவடிக்கை எடுத்துள்ளார்?" - என்று விமல் வீரவன்ஸ தனது கேள்வியில் குறிப்பிட்டிருந்தார்.

இக்கேள்விக்கு வாய்மூல விடையளித்த அமைச்சர், சம்பந்தப்பட்ட உறுப்பினர் தகுந்த ஆதாரங்களுடன் முறைப்பாடுகளைச் சமர்ப்பிக்க வேண்டும். அதைவிடுத்து பத்திரிகைச் செய்திகளை மட்டும் ஆதாரமாகக் கொண்டு குற்றச்சாட்டுகளைச் சமர்ப்பிக்கக்கூடாது. உரிய முறையில் முறைப்பாடுகள் செய்யப்பட்டால் அதனைப் பரிசீலனை செய்ய நாம் தயார் எனக் கூறினார்.

### கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஒக.28

வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் ரங்கராஜா தலைமையிலான மாகாணக் கல்வி அமைச்சின் அதிகாரிகள் குழுவொன்று யாழ் மாவட்டக் கல்விப் பணிப்பாளர்களுடன் இன்று காலை 10 மணிக்கு கலந்துரையாடல் ஒன்றை நடத்தவுளது.

யாழ்.மேலதிக மாகாணக்கல்விப் பணிமனையில் நடைபெறவுள்ள இக்கலந்துரையாடலில் யாழ்.மாவட்டக் கல்வி அபிவிருத்தி தொடர்பாக ஆராயப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ம-8)

## தேசிய சமாதானப் பேரவை தடைநீக்கத்துக்கு வரவேற்பு

விடுதலைப் புலிகள் மீதான தடையை இலங்கை அரசு நீக்குவதென்பது வரவேற்கத்தக்கதொன்றாகும் என தேசிய சமாதானப் பேரவையின் பணிப்பாளர் ஜெகான் பெரேரா கூறியுள்ளார்.

புரிந்துணர்வு உடன்படிக்கையை இருதரப்பும் ஏற்றுக்கொண்டு கைச்சாத்திட்டபோதே அரசு விடுதலைப் புலிகளின் வெளிப்படைத்தன்மை மற்றும் நியாயத்தன்மைகளை ஏற்றுக்கொண்டதாகவே அர்த்தமாகிறது. அதேபோன்று விடுதலைப் புலிகளின் அலுவலகங்களை இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் நிறுவ அனுமதித்ததையே அரசு விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்கிவிட்டதாகவே கருத வேண்டும்' - என்றார்.

ஜே.வி.பி., சிஹல உறுமய முதலான சில கட்சிகள் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தாலும் அவற்றைக் கருத்திற்கொள்ளாது அரசு விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்குவதே நன்மையளிக்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஒ-12)

## பேச்சுக்கு விடுதலைப் புலிகளை அழைத்து வந்ததே அரசின் சாதனை

### அமைச்சர் பாக்கீர்மாக்கார் தெரிவிப்பு

கொழும்பு,ஒக.28

விடுதலைப் புலிகளைப் பேச்சுக்கு அழைத்துக் கொண்டு வந்தமையே தற்போதைய அரசின் முதலாவது வெற்றியாகும்.

- இவ்வாறு மக்கள் தொடர்பாடல் அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் தெரிவித்துள்ளார்.

கட்டுவல, பனாமடுவ தபால் நிலையத்தினைத் திறந்துவைத்து உரையாற்றும்போதே அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது -

"விடுதலைப் புலிகள் மிக நீண்டகாலமாகவே யுத்தத்தின்மூலம் தனிநாடு பெறுவதை நோக்கமாகக் கொண்டிருந்தனர். அத்துடன் அவர்கள் சுதந்திரம் என்பது போராடிப் பெறுவது என்றும் எண்ணி வந்தனர். இந்த எண்ணப்பாட்டை மாற்றி பேச்சு மூலமாகவும் சுதந்திரத்தை அடையலாம் என்பதை உணர்த்தி விடுதலைப் புலிகளைப் பேச்சுக்கு அழைத்தமை அரசின் பெரும் சாதனையாகும்.

"சில விட்டுக்கொடுப்புகளும் அவசியம். அர்ப்பணிப்புகளும் அவசியம் என்பதை இரு தரப்பினரும் உணர்ந்துள்ளார்கள்.

"சமாதானத்தினை அடைவதற்கான இறுதிச் சந்தர்ப்பம் இதுவாகும். இதனை உணர்ந்துகொண்டு அனைத்துத் தரப்பினரும் சமாதானத்திற்காகப் பாடுபடல்வேண்டும்" - எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ-12)

### சங்கீதசபை பரீட்சை

யாழ்ப்பாணம்,ஒக.28

வடஇலங்கை சங்கீத சபையால் நாடளாவிய ரீதியில் நடத்தப்படும் தரம் II தொடக்கம் தரம் VI வரையான சங்கீத பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்களுக்கான எழுத்துப் பரீட்சை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 7ஆம், 8ஆம் திகதிகளில் யாழ். குடாநாட்டிலுள்ள 14 பரீட்சை நிலையங்களில் நடைபெறவுள்ளது.

இப்பரீட்சைக்கு குடாநாட்டில் இருந்து சுமார் 6 ஆயிரம் பேர் வரை தோற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பொலீஸ்மா அதிபர் நேற்று கொழும்பில் காலமானார்

கொழும்பு,ஒக.28

பொலீஸ் மா அதிபர் லக்கி கொடித்துவக்கு நேற்று கொழும்பில் காலமானார். அன்னாரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் மரணம் சம்பவித்தது.

சில மாதங்களாக அவர் சுகவீனமுற்றிருந்தார். 1941 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 7 ஆம் திகதி அவர் குருநாகலையில் பிறந்தார். பண்டாரவளை புனித தோமஸ் கல்லூரியிலும், மருதானை புனித ஜோசப் கல்லூரியிலும் அவர் கல்வி பயின்றார். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பட்டதாரிப் பட்டம் பெற்றார்.

1966 ஆம் ஆண்டு உதவிப் பொலீஸ் அத்தியட்சகராக அவர் பொலீஸ் சேவையில் சேர்ந்தார். (ம-12)

# நெடுமாறனை விடுவிக்க வேண்டும்; ஒலிநாடாவில் வீரப்பன் கோரிக்கை!

## ஆப்கானில் குண்டுவெடிப்பு!

காபூல்,ஓக.28

ஆப்கானிஸ்தான் நாட்டில் காபூல் நகரிலுள்ள ஐ.நா. விருந்தினர் மாளிகையருகே கடந்த திங்கட்கிழமை நிகழ்ந்த குண்டுவெடிப்புச் சம்பவத்தில் இருவர் காயமடைந்தனர்.

இந்த மாளிகைக்கு வெளியே இருந்த குப்பைத் தொட்டியில் வெடி குண்டு மறைத்து வைக்கப்பட்டிருந்தது. காயமடைந்த இருவரும் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ஒ)

## தமிழகத்துக்கு காவிரி நீரை திறந்துவிடவும் கோரியுள்ளார்

ஈரோடு,ஓகஸ்ட் 28

**தமிழகச் சிறைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ள பழ.நெடுமாறன், கொளத்தூர் மணி ஆகியோரை விடுவிக்க வேண்டும். பேச்சுக்கு பழ. நெடுமாறனை தூதுவராக மீண்டும் காட்டுக்குள் அனுப்பவேண்டும் என்று சந்தனமரக் கடத்தல்காரன் வீரப்பன் அனுப்பியுள்ள ஒலிநாடாவில் கூறியிருப்பதாகத் தெரியவந்துள்ளது.**

கர்நாடக முன்னாள் அமைச்சர் நாகப்பாவைக் கடத்திய வீரப்பன் அவரை விடுவிக்க தூதுவரை அனுப்பக்கோரி 'ஓடியோ' ஒலிநாடாவை அனுப்பியுள்ளதாகத் தெரியவந்துள்ளது. ஒலிநாடா அனுப்பியுள்ளதை ஒப்புக்கொண்ட கர்நாடக முதல்வர் கிருஸ்ணா அதில் என்ன கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவிக்க மறுத்துவிட்டார்.

அந்த ஒலி நாடாவில் வீரப்பன் பேசியுள்ளார்.

"நாகப்பாவை விடுவிக்க பொலீஸாரை அனுப்பக்கூடாது. சிறையில் அடைக்கப்பட்டுள்ள பழ.நெடுமாறன், கொளத்தூர் மணி, நக்கீரன் நிருபர் சிவசுப்பிரமணியம் ஆகியோரை விடுதலைசெய்ய வேண்டும். அவர்கள் மீதான வழக்குகளை வாபஸ்பெற வேண்டும். பேச்சு நடத்த பழ.நெடுமாறனைக் காட்டுக்குள் அனுப்பிவைக்க வேண்டும். அதற்கு முன்னதாக தேடுதல் வேட்டையை முற்றிலுமாக நிறுத்தி வைக்க வேண்டும். இந்தமுறை எனது கோரிக்கையில் நான் உறுதியாக இருப்பேன் இது தொடர்பாக விரைவில வேறு ஓர் ஒலிநாடாவையும் அனுப்பவிருக்கிறேன்.' என்று அந்த ஒலி நாடாவில் வீரப்பன் குறிப்பிட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

ஆனால், பணயப் பணம் கொடுக்க வேண்டுமா? என்பதுபற்றி அதில் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்று



கூறப்படுகிறது.

மேலும் "ராஜ்குமாரை மீட்க இரு அரசுகளின் அனுமதியின் பேரில் கொளத்தூர் மணி, பழ.நெடுமாறன் மற்றும் நக்கீரன் கோபால், நிருபர் சிவசுப்பிரமணியன் உள்ளிட்டோர் என்னுடன் பேச்சு நடத்தினர். இந்நிலையில், கொளத்தூர் மணி, சிவசுப்பிரமணியன் ஆகியோரை கடத்தலுக்குச் சதி செய்தார்கள் என்றுகோரி கைது செய்துள்ளதை வீரப்பன் கண்டித்துள்ளார்.

மேலும், "இவர்களை நிபந்தனையின்றி விடுதலை செய்ய வேண்டும். மைசூர் சிறையில் சுமார் பத்து ஆண்டுகள் 'தடா' கைதிகளாக இருந்து விடுதலை செய்யப்பட்டவர்களை பொலீஸார் மீண்டும் கைதுசெய்துள்ளனர். பழிவாங்கும்நோக்கில் தமிழக அரசு செயற்படுவதை நிறுத்தவேண்டும். காவிரியில் இருந்து தமிழகத்துக்கு தண்ணீர் திறந்துவிடப்பட வேண்டும். மொழிக்கொள்கை, திருவள்ளுவர் சிலை அமைத்தல் என ராஜ்குமார் விடுதலையின்போது முன்வைத்த கோரிக்கைகளுக்கு இதுவரை எவ்வித நடவடிக்கையும் இல்லை. அரசுகள் தங்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக, பொய் வாக்குறுதிகளைத் தந்து என்னை ஏமாற்றிவிட்டனர். தமிழினத்தின் மீது எனக்குள்ள பற்றுதலை தீவிரவாதம் என்று கூறியதோடு, பொது அமைதி ஏற்படுத்த என்னுடன் பேச்சு நடத்தியவர்களையும் தீவிரவாதிகள் என்று அரசு கைதுசெய்துள்ளது. வெகுஜன விரோதிகளாக மாறிவிட்ட அரசியல்வாதிகளுக்குப் பாடம் புகட்டப் புறப்பட்டுவிட்டேன். நாகப்பா கடத்தல் மூலம் இரு அரசுகளுக்கும் எச்சரிக்கை விடுக்கின்றேன்." என்று ஒலி நாடாவில் வீரப்பன் பேசியுள்ளதாகத் தெரிகிறது. (ஒ)

## நாகப்பாவை மீட்டுவர ரஜனியை அனுப்புங்கள்!

### டாக்டர் ராமதாஸ் யோசனை

புதுடில்லி,ஓக.28

சந்தன மரக் கடத்தல் வீரப்பன் கடத்திச் சென்ற நாகப்பாவை மீட்க



மத்தியஸ்தராக நடிகர் ரஜனிகாந்த்தை அனுப்பலாம் என்று பா.ம.க. நிறுவுனர் டாக்டர் ராமதாஸ் யோசனை தெரிவித்துள்ளார்.

டில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், 'தமிழ், கன்னடம் அறிந்த ஒரு நடிகரை அனுப்பி மத்தியஸ்தம் செய்து நாகப்பாவை மீட்கலாம்' என்றார்.

செய்தியாளர்கள் தொடர்ந்து கேட்டதற்கு, 'அது ஒரு நடிகராக இருக்கலாம். குறிப்பாக நடிகர் ரஜனியாக இருக்கலாம். இது எனது கருத்து என்றார்.'

பெங்களூரில், கன்னட நடிகர் ராஜ்குமாரின் மகன் புனித் நடித்த புதிய படத்தின் விழாவில் பேசிய ரஜனிகாந்த், வீரப்பனை சம்ஹாரம் செய்யவேண்டும் என்று குறிப்பிட்டதையடுத்து, ரஜினிகாந்த் மற்றும் 'பாபா' படம் குறித்து ராமதாஸ் கடும் விமர்சனம் செய்து வந்தார். தமிழக இளைஞர்களுக்கு தவறான முன்னுதாரணமாக ரஜனி திகழ்கிறார். அவரது படத்தை மக்கள் புறக்கணிக்க வேண்டும் என்றும் பேசினார்.

இந்நிலையில் நாகப்பாவை மீட்க ரஜனியை அனுப்பலாம் என்று ராமதாஸ் குறிப்பிட்டுள்ளார். (ஒ)

## தமிழக அரசு பஸ்ஸுக்கு கர்நாடகாவில் தீவைப்பு!

பெங்களூர்,ஓக.28

கர்நாடக முன்னாள் அமைச்சர் நாகப்பா, சந்தன மரக்கடத்தல் வீரப்பனால் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு கடத்தப்பட்ட சம்பவத்தை அடுத்து, தமிழக அரசு பஸ் எரிக்கப்பட்டது.

நாகப்பா கடத்தப்பட்டதை அறிந்த அவரது ஆதரவாளர்கள் கொள்ளேகால் சாலையில் மறியலில் ஈடுபட்டனர்.

வாகனங்கள்மீது கல்வீச்சில் ஈடுபட்டனர். அப்போது அங்குவந்த தமிழக அரசு பஸ்ஸை வன்முறைக் கும்பல் மறித்தது பயணிகளை இறக்கிவிட்டு அக்கும்பல் பஸ்ஸுக்குத் தீ வைத்தது. வன்முறையாளர்களின் கல்வீச்சில் 10இற்கும் மேற்பட்ட வாகனங்கள் சேதமடைந்தன.

இச்சம்பவத்தால் தமிழகம் - கர்நாடகம் இடையேயான போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

காமகெரே பகுதியில் தொடர்ந்து பதற்றம் நிலவுகிறது. நாகப்பாவின் வீட்டின் முன் ஆயிரக்கணக்கானோர் குவிந்துள்ளனர். (ஒ)

## ஆப்கானில் அமெரிக்கப்படை 10ஆண்டுகள் தங்கியிருக்கும்!

### அந்நாட்டு எம்.பி. தெரிவிப்பு

காபூல்,ஓக.28

ஆப்கானிஸ்தானில் தீவிரவாதத்தை விரட்டியடித்து அதனை வேர் அறுக்கவும், அமைதியை நிலை நாட்டவும் அமெரிக்க இராணுவம் அந்த நாட்டில் 5 முதல் 10 ஆண்டுகள் வரை தங்கியிருக்கும் என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.

அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் 11 பேர் ஆப்கானிஸ்தான் சென்றுள்ளனர். அவர்கள் அந்த நாட்டின் அதிபர் ஹமீட் ஹர்சாயை சந்தித்துப் பேச இருக்கின்றார்கள். அந்தக்குழுவில் ஒருவரான நாடாளுமன்ற உறுப்பினர் ஜேம்ஸ்பார்சியா இத்தகவலை வெளியிட்டார்.

"மத்திய ஆசியாவிலும் உலகத்திலும் தீவிரவாதத்தை ஒழிப்பதில் இருந்து அமெரிக்கா பின்வாங்காது. இதற்காக நாங்கள் ஆப்கானிஸ்தானில் 5 முதல் 10 ஆண்டுகள் தங்க வேண்டிய நிலை ஏற்படலாம்" என்று பார்சியா கூறினார். (ஒ)

## நேபாள வங்கி ஒன்றில் தீவிரவாதிகள் கொள்ளை!

காத்மண்டு,ஓக.28

நேபாளத்தில் ராதாட் மாவட்டத்தில் மாவோயிஸ தீவிரவாதிகள் வங்கி ஒன்றில் குண்டுவீசிக் கொள்ளையடிக்க முயன்றார்கள்.

சந்திரனிகாபூர் நகர வங்கியில் நடந்த இந்தக் கொள்ளை முயற்சியில் பொலீஸாருக்கும், தீவிரவாதிகளுக்கும் துப்பாக்கிச் சண்டை நடந்தது. இதில் 2 தீவிரவாதிகளும், பொலீஸாரில் ஒருவரும் கொல்லப்பட்டார்கள்.

வங்கியில் இருந்த 50 லட்சம் ரூபா நேபாள நோட்டுக்களையும், 10 லட்சம் ரூபாய் இந்திய நோட்டுக்களையும் நகைகளையும் கொள்ளையடித்துக்கொண்டு சில தீவிரவாதிகள் தப்பியோடிவிட்டனர். (ஒ)

## அமைச்சர்கள் சென்ற விமானம்மீது பங்களாதேஷில் துப்பாக்கிச்சூடு!

டாக்கா,ஓக.28

பங்களாதேஷ் உள்துறை அமைச்சர் அல்டாப் ஹுசைன் சவுத்திரி அவரது குடும்பத்துடன் பாரிசல் நகர விமான நிலையத்தில் இருந்து டாக்காவுக்குப் புறப்பட்டார். விமானத்தில் மற்றோர் அமைச்சர் மடிமர் ரகுமான் சவுத்திரியும் சென்றார்.

விமானம் புறப்பட்ட சில வினாடிகளில் அதன்மீது யாரோ துப்பாக்கியால் சுட்டார்கள். ஆனாலும் விமானம் தொடர்ந்து பறந்து பத்திரமாக டாக்கா வந்துசேர்ந்தது.

அதன் உட்புறமோ, வெளிப்புறமோ துப்பாக்கிக் குண்டினால் எந்த சேதமும் ஏற்படவில்லை.

தெற்கு கடற்கரை மாவட்டங்களில் இடதுசாரி கட்சிகள் தடை செய்யப்பட்டு இருக்கின்றன. அந்த கட்சி உறுப்பினர்கள்தான் இந்த செயலில் ஈடுபட்டிருக்கவேண்டும் என்று கருதப்படுகிறது. (ஒ)

## அமெரிக்காவை வீழ்த்துவதாக பின்லேடன் எழுதிய கடிதம்

### இணையத்தளத்தில் வெளியானது

துபாய்,ஓக.28

சர்வதேச தீவிரவாதி ஒஸாமா பின்லேடன் கைப்பட எழுதிய கடிதம் இஸ்லாமிய இணையத்தளத்தில் வெளியாகியுள்ளது. "புனிதப் போர் நடத்தி அமெரிக்காவை வீழ்த்துவோம்" என்று அந்தக் கடிதத்தில் பின்லேடன் தெரிவித்துள்ளார். ஆப்கானிஸ்தானை அமெரிக்கப் படைகள் கைப்பற்றிய போது பின்லேடன், தலிபான் தலைவர் முல்லா ஒமருடன் தப்பியோடித் தலைமறைவாகி விட்டார்.

அவர் எங்கே பதுங்கியிருக்கின்றார் என்பதை அமெரிக்க இராணுவத்தால் இதுவரை கண்டுபிடிக்க முடியவில்லை. ஆப்கானிஸ்தானிலும், பாகிஸ்தானிலும் அவரைத் தேடிவருகிறார்கள்.

இந்த நிலையில் துபாயில் இருந்து வெளியாகும் இணையத்தளத்திற்கு ஒரு கடிதம் வந்துள்ளது. அந்தக் கடிதத்தை பின்லேடன் தனது கைப்பட எழுதியிருந்ததாகக் கூறப்படுகிறது.

4 பக்கங்கள் கொண்ட அந்தக் கடிதத்தில் கூறப்பட்டுள்ளதாவது:-

"ஆப்கானிஸ்தான் மக்களே! அமெரிக்காவுக்கு எதிராகப் புனிதப் போரில் குதியுங்கள். அமெரிக்கா மனிதாபிமானத்தைப் புறக்கணித்துவிட்டு எல்லை மீறிச் செயற்படுகிறது. அல்

உலக அரங்கில்

லாஹ்வின் விருப்பப்படி அமெரிக்காவின் வீழ்ச்சியை நாம் பார்க்கப் போகிறோம்."

- இவ்வாறு பின்லேடன் எழுதியிருக்கின்றார்.

பின்லேடனின் கடிதம் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. "ஆப்கானிஸ்தான் வட்டாரத்தில் இருந்து எங்களுடைய பாகிஸ்தான் செய்தியாளருக்கு இந்தக் கடிதம் வந்துள்ளது. இது சமீபத்தில் எழுதப்பட்ட கடிதம்தான். ஆனாலும் கடிதத்தில் திகதி இல்லை. பின்லேடன் உயிரோடு இருப்பதற்கான வாய்ப்பு இருப்பது அவருடைய கடிதம் மூலம் தெரியவருகிறது." என்று அந்த இணையத்தளம் தனது செய்தியில் கூறியிருக்கிறது. (ஒ)

### பலஸ்தீனர் ஒருவர் நாடு கடத்தல்

அமெரிக்காவின் புளோரிடா பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகப் பணியாற்றி வந்த பேராசிரியர் மார்ஷல் அல் நெகாரி என்ற பலஸ்தீனரை அமெரிக்க அரசு அங்கிருந்து நாடு கடத்தியுள்ளது.

இப்பேராசிரியருக்கு பலஸ்தீனத் தீவிரவாத அமைப்பான இஸ்லாமிக் ஜிகாத்துடன் தொடர்பிருப்பதாகக் குற்றஞ்சாட்டியே அமெரிக்க அரசு அவரை நாடு கடத்தியது. இவர் முன்னர் இரு தடவைகள் அமெரிக்க பொலீஸாரால் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



சீனாவில் நீரில் மூழ்கியுள்ள தனது வீட்டைப் பார்க்கச் செல்லும் ஒருவரைப் படத்தில் காணலாம். சீனாவில் ஏற்பட்டிருந்த வெள்ளப்பெருக்கு வடியத் தொடங்கியுள்ள போதிலும் ஆறுகளில் நீர்மட்டம் உயர்ந்துள்ளதால் அவற்றின் அருகே உள்ள வீடுகள் நீரில் மூழ்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நிப்போன் வாயு அடுப்புகள்

- நிறை
- துருப்பிடிக்காத உருக்கிலான வெளியுறையின் தடிப்பு
- தீப்பற்ற வைக்கும் ஏற்பாட்டின் தரம்

என்பன வற்றை ஏனைய தயாரிப்புகளின்
அம்சங்களுடன் ஒப்பிடுங்கள்




என்பன இலங்கை முழுவதும் கிடைக்கும்
சாதாரண டியூலக்ஸ் மாதிரிகள்

- பல நிறங்களிலும் பெறலாம்
- உயர் தர தீப்பற்று திறனுடைய யப்பானிய சாவி
- சுலபமாக சுத்தம் செய்யக் கூடிய துருப்பிடிக்காத வெளியுறை
- மரம் மற்றும் மாபிள் வண்ணங்கள்
- யப்பானிய தொழில்நுட்பமும் தரமும்

LANKA NIPPON

தலைமைக் காரியாலயம்
இல.18, கெய்சர் வீதி, கொழும்பு-11
தொலைபேசி 437735-324726
தொலை நகல் 437736

கிளை
இல. 10, ட்றிலோனி பிளேஸ்
(பால்சாலையின் பின்புறம்)
பம்பலப்பிட்டி சந்தி, கொழும்பு - 4.
தொலைபேசி - 589992, 582365.


# துயர் பகிர்கின்றோம்



தோற்றம்
1944

மறைவு
11
-
08
-
2002

## அமரர் அருணாசலம் அமிர்தலிங்கம்

*(சமூகசேவை அலுவலர், பிரதேச செயலகம், சண்டிலிப்பாய்)*

அன்னாரின் ஆத்மசாந்திக்கிரியைகள் இன்று (28.08.2002) புதன் கிழமை நடைபெறுகின்றன.

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் சமூகசேவை அலுவலராகப பணிபுரிந்து எம்மைவிட்டுப் பிரிந்த அமரர் அருணாசலம் அமிர்தலிங்கம் அவர்களின் ஆத்மசாந்திக்கிரியைகள் நடைபெறும் இன்றைய தினத்தில் அவரது பிரிவுத் துயரில் நாமும் பங்கேற்று அன்னாரின் ஆன்மசாந்திக்காக எல்லாம்வல்ல இறைவனை வேண்டிநிற்கும்.

சமூகசேவை அலுவலர்கள்
யாழ்.மாவட்டம்.

(7585)

# கொழும்புத்துறையில் தாய், சேய் நல சிகிச்சை

கொழும்புத்துறை,ஓக.28

கொழும்புத்துறை சுவாமியார் வீதியில் யாழ்.மாநகர சபையின் மகப்பேற்று நிலையம் மீளவும் தனது வைத்திய சேவைகளில் சிலவற்றை ஆரம்பித்துள்ளது.

அங்கு தற்போது தாய், சேய் நலனோம்பு சிகிச்சைகள் மட்டும் நடைபெறுவதாகவும் - தளபாடவசதிகள் கிடைத்ததும் விரைவில் பிரசவ பகுதியும் செயற்படுமெனவும் - தெரிய வருகிறது.

2000ஆம் ஆண்டு இப்பகுதி மக்கள் இடம்பெயர்ந்தவேளை இப் பிரசவவிடுதியும் இயங்கமுடியாது போனமை குறிப்பிடத்தக்கது.

(ஒ-ரி)

# வல்லைப் பகுதியில் உப்பு விளைச்சல

கரவெட்டி,ஓக.28

தற்போது நிலவும் வெப்பநிலை காரணமாக வல்லை, கப்பூது, மண்டான், கரணவாய் போன்ற கால்வாய்ப பகுதிகளில் இயற்கையாக உப்பு விளைநதுள்ளது.

இதனை மக்கள் எவ்வித கட்டுப்பாடுமின்றி அள்ளிவருகின்றனர். நேற்றுக் காலை 11.50 மணியளவில் பெய்த திடீர் மழையால் உப்பு கரைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-70)

# வலி.தெற்கில் பன்றிகளால் தொல்லை!

வலிகாமம் தெற்கு,ஓக.28

வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் பிரிவின் வட பகுதியிலுள்ள கிராமங்களில் பன்றிகளின் தொல்லை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இரவு நேரத்தில் கூட்டமாகவரும் பன்றிகள் தோட்டக்காணிகளில் பயிரிடப்பட்டுள்ள மரவள்ளி, பீற்றூட், கரட் மற்றும் குரக்கன், வாழைகள் போன்றவற்றை சேதப்படுத்துவதாகக கூறப்படுகிறது.

ஈவினை, புன்னாலைக்கட்டுவன் வடக்குப் போன்ற இடங்களில் பன்றிகளின் தொல்லையால் தொடர்ந்து பயிர் செய்ய முடியாமல் இருப்பதாகவும் -

விளைந்த பயிர்களை பன்றிகள் சேதப்படுத்தியமையால் தாம் பெரும் நஷ்டமடைந்துள்ளதாகவும் -

இப்பகுதி விவசாயிகள் வலி. தெற்கு பிரதேச செயலரிடம் முறைப்பாடு செய்துள்ளனர். (ஒ-152)


# நாங்கள் வழங்குகின்றோம், யாழ். மக்களுக்கு!

உலகப் புகழ்பெற்ற

TOSHIBA

ஊடாக பின்வரும் சேவைகளை

- DIGITAL AND ANALOG PHOTO COPIERS
- FAX MACHINES
- NOTE BOOK COMPUTERS
- BUSINESS COMMUNICATION SYSTEM



★ ஒரு Photo Copy Machine ஐ கொள்வனவு செய்து 20,000 கொப்பிகளுக்கான Toners ஐ இலவசமாக்கிக் கொள்ளுங்கள்.

★ இத்துறையில் நிபுணர்கள் வருகை தந்துள்ளார்கள். உங்கள் இத்துறைசார் அனைத்துத் தேவைகளுக்கும் இன்றே அனுகுங்கள்.

எங்கள் சேவை 28.08.2002 வரை மாத்திரமே!!!

(7573)

WHEEL MOVERS OFFICE AUTOMATION
642, Pointpedro Road, Nallur, Jaffna.
Tel: 021-2179, 3234 Cool Line: 2443

JOHN KEELS OFFICE AUTOMATION (PVT) LTD.
320/1, Union Place, Colombo 2.
Tel: 431576, 075-332611, 074-715544 Fax: 431745


# மரண அறிவித்தல்

## சபாரத்தினம் சண்முகராசா

*(ஊரிமையாளர், லதா ஜூ வல்லறி, கச்சாய் றோட், சாவகச்சேரி)*

சாவகச்சேரி, சங்கத்தானையைப் பிறப்பிடமாகவும், ***49/34, No.17*** *ஒழுங்கை*, கல்லூரி வீதி, கொட்டாஞ்சேனை, கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட சபாரத்தினம் சண்முகராஜா அவர்கள் நேற்றுமுன்தினம் (26-08-2002) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாரத்தினம் - நாகேஸ்வரியின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இரத்தினம் - சரஸ்வதி தம்பதிகளின் அன்பு மருமகனும், இந்திரராணியின் அன்புக் கணவரும், வரதராஜன், கெங்கேஸ்வரன், கோபிராஜ் (ஆஸ்திரேலியா), சுவர்ணலதா, சுபாஜினி ஆகியோரின் அன்புத் தந்தையும், விஜயகுமார், தனுஷா ஆகியோரின் அன்பு மாமனாரும், டினோஜன், டிலக்ஷன், தனுஷன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28-08-2002) புதன்கிழமை கொழும்பில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக காலை 10 மணிக்கு மாதம்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*49/34, No.17 ஒழுங்கை,*
*கல்லூரி வீதி,*
*கொட்டாஞ்சேனை,*
*கொழும்பு.*

தகவல்:
வரதராஜன், கெங்கேஸ்வரன்
(பிள்ளைகள்)

(7587)


# உங்கள் தேவைகளுக்கேற்ற உறுதிமிக்க நண்பன்

# சீ.ஏ.ஐ.

# உறுதி மற்றும் பல்துறைத் திறன்!

# நீர்க் குழாய்



சீஏஐ நீர்க்குழாய்கள் நீடித்துழைக்கும் உறுதி கொண்டவை. அதிகளவு நீரை விரைவாக, சுலபமாக, ஆற்றலுடன் எடுத்துச் செல்லத்தக்கவை. விவசாயம், கைத்தொழிற்றுறை, தோட்டத்துறை, மற்றும் சுரங்கங்கள் போன்ற அகழ்வுத் தொழிற்றுறை தொடர்பான நீர்ப்பாசனங்களுக்கு மிகவும் உகந்தது. தற்போது,

3/4அங், 1அங், 1 1/4அங், 1 1/2அங், 2அங், 3அங், அளவுகளில் கிடைக்கின்றது. விலை மீற்றர் ரூபா 32/-இலிருந்து

- கவர்ச்சிகரமான வர்த்தக விலைக் கழிவுகள்

# பொலிபெக் சீ. ஏ. ஐ. மார்க்கட்டிங்

52, மயூரா பிளேஸ், கொழும்பு 6. தொலைபேசி 582615, 588313

(C/23587)

உதயன்

## புதிய உறவைத் தவறாக புரிந்துகொள்ளக் கூடாது

ஐக்கிய தேசிய முன்னணி அரசின் சிரேஷ்ட அமைச்சர்களுக்கு எதிராகத் தனித்தனியாக நம்பிக்கையில்லாப் பிரேரணைகளைக் கொண்டு வருவதற்கு எதிரணியில் உள்ள பொதுஜன ஐக்கிய முன்னணி முஸ்தீபு செய்துவருகிறது. அதன் ஓர் அங்கமாக உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டு, நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டு தோற்கடிக்கப்பட்டும்விட்டது.

இப்படி ஒவ்வோர் அமைச்சர்களுக்கும் எதிராகத் தனித்தனியாக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரும் எதிர்த்தரப்பின் திட்டத்தை முறியடிப்பதற்காக ஆளும் ஐ.தே.முன்னணி மாற்றுத்திட்டம் ஒன்றை முன்வைத்துள்ளது. தனது அரசுக்கு நம்பிக்கைகோரும் பிரேரணை ஒன்றைச் சமர்ப்பித்து, அதை நிறைவேற்றுவதே அரசுத் தரப்புத் திட்டமாகும்.

அத்தகைய நம்பிக்கைப் பிரேரணை நாளை நாடாளுமன்றத்துக்கு வருகின்றது.

உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை வாக்கெடுப்புக்கு வந்தபோது நாடாளுமன்றத்தில் அங்கம்வகிக்கும் அனைத்துத் தமிழ்க் கட்சிகளும் - ஈ.பி.டி.பி. உட்பட - அரசுக்கு ஆதரவளிக்கும்வகையில் அந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையை எதிர்த்து வாக்களித்தன.

அரசுக்கு ஆதரவு கொடுக்கும் நம்பிக்கைப் பிரேரணையிலும் தமிழ்க் கட்சிகள் அப்படித்தான் நடந்துகொள்ளும் என எதிர்பார்க்கப்பட்டது.

அதுவும், விடுதலைப் புலிகளுடன் சமாதான முயற்சிகளை முன்னெடுத்திருக்கும் அரசுத்தரப்புக்கு ஆதரவாகக் கொண்டுவரப்படும் நம்பிக்கைப் பிரேரணை வெற்றிபெறுவதைத் தமிழ்க் கூட்டமைப்பு உறுதிசெய்ய முயலும் என்றே நம்பப்பட்டது.

ஆனால், தமிழ்க் கூட்டமைப்பில் இடம்பெற்ற அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் வித்தியாசமான நிலைப்பாடு ஒன்றை எடுத்துள்ளது.

அரசுக்கு நம்பிக்கை தெரிவிக்கும் தீர்மானத்தை ஆதரிப்பதில்லை. அதேசமயம், அதை எதிர்த்தும் செயற்படுவதில்லை - இதுதான் தமிழ்க் காங்கிரஸின நிலைப்பாடு. தனது நிலைப்பாட்டுக்குத் தெளிவான காரணங்களையும் அக்கட்சி முன்வைத்துள்ளது.

வடக்கு - கிழக்குத் தமிழர் தாயகத்தில் இயல்பு நிலை உருவாக்கப்படவில்லை. அதியுயர் பாதுகாப்புக் கெடுபிடிகள் அகலவில்லை. லட்சக்கணக்கில் இடம்பெயர்ந்த தமிழ்மக்கள் மீளக்குடியமர வழிசெய்யப்படவில்லை. தமிழர் தாயகக் கரையோரங்களில் இன்னும் மக்கள் நடமாட்டத்துக்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது. இந்தநிலையில் - இந்த நடவடிக்கைகளுக்கு வழிசெய்யாத அரசுக்கு - நம்பிக்கை தெரிவிக்கும் பிரேரணையை எப்படி ஆதரிக்கமுடியும்?

- இவ்வாறு நியாயமான கேள்வி ஒன்றை எழுப்பியிருக்கின்றது தமிழ்க் காங்கிரஸ்.

அதேசமயம், புலிகளுடன் சமாதான முயற்சிகளை ஆரம்பித்திருக்கும் அரசின் ஸ்திரத்தன்மையைக் குலைக்கவும் தமிழ்க் காங்கிரஸ் விரும்பவில்லை.

எனவே, அரசு மீதான நம்பிக்கைப் பிரேரணையை ஆதரிப்பதில்லை; அதேநேரம் எதிர்ப்பதுமில்லை என்று அக்கட்சி தீர்மானித்திருக்கின்றது.

தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் இந்த நிலைப்பாட்டைத்தான் பொதுவாக அனைத்துத் தமிழ்மக்களும கொண்டுள்ளனர்.

தமிழ்மக்களின் ஏகப் பிரதிநிதிகளான புலிகளுடன் அமைதிப் பேச்சு நடத்தி சமாதானத் தீர்வை எட்டுவதற்கு இந்த அரசு முன்வந்துள்ளது. அதற்கு ஊக்கம் கொடுப்போம். அதனால், இந்த அரசின் செயற்பாடுகளைக் கண்ணை மூடிக்கொண்டு ஆதரிக்கின்றோம் என்று கருத்தல்ல. இதுதான் தமிழர்களின் நிலைப்பாடு.

இந்த நிலைப்பாட்டின் அடிப்படையில்தான் வடக்கு - கிழக்குக்கு விஜயம்செய்யும் அரசியல்வாதிகளுக்காயினும் சரி, வர்த்தகர்கள், ஏனைய பரமுகர்கள், தெற்கு பொதுமக்கள் யாருக்கென்றாலும சரி வடக்கு - கிழக்கில் வரவேற்பளிக்கப்படுகின்றது.

இந்த வரவேற்பையும், ஆதரவையும் தென்பகுதி மக்களும், அரசியல்வாதிகளும், பிரமுகர்களும், அரசும தவறாகப் புரிந்துகொள்ளக்கூடாது.

தமிழ்க் காங்கிரஸின் தற்போதைய நிலைப்பாடு தென்பகுதியினருக்கு இதனைத் தெளிவாகப் புரியவைத்திருக்கும் என்று நம்பலாம்.

# பத்துலட்சம் மிதிவெடிகள் வடக்கு-கிழக்கில் புதைப்பு

## அவற்றை அகற்றப் பத்துவருடங்கள் பிடிக்கும்

கொழும்பு,ஓகஸ்ட் 28

வடக்கு - கிழக்கில் புதைக்கப்பட்டுள்ள மிதிவெடிகளை முற்றாக அகற்றுவதற்கு சுமார் 10 வருடங்கள் பிடிக்கலாம்.

அதுகூட நிரந்தர அமைதி நிலவினால் மட்டுமே சாத்தியமாகும்; இலகுவாக அந்த வேலையை மேற்கொள்ளக் கூடியதாக இருக்கும்.

கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ள மூத்த அதிகாரி ஒருவர் இத் தகவலைத் தெரிவித்தார்.

வடக்கில் கண்ணிவெடிகளை அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ள- அமெரிக்க உதவிக் குழுவைச் சேர்ந்த - தொழில்நுட்ப அதிகாரி டொணட் ஸ்மித்தே இத் தகவலை வெளியிட்டிருக்கின்றார்.

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் சுமார் 10 லட்சம் மிதிவெடிகள் புதைக்கப்பட்டுள்ளதாக இராணுவ மிதிவெடி அகற்றும் தொழிநுட்பப் பிரிவின் அதிகாரி ஒருவர் தெரிவித்திருக்கின்றார்.

(ம)

## சிறுவர்களை வேலைக்கு அமர்த்த மட்டக்களப்பில் புலிகள் தடை!

மட்டக்களப்பு,ஓக.28

சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவதற்கு விடுதலைப் புலிகள் தடைவிதித்துள்ளனர்.

இது தொடர்பான துண்டுப் பிரசுரங்களை மட்டக்களப்புப் பகுதியில் புலிகள் விநியோகித்திருக்கின்றனர்.

சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவது, அவர்களைத் துனபுறுத்துவது, பாலியல் வன்முறைகளுக்கு உட்படுத்துவது ஆகியவை தொடர்பாக பல்வேறு முறைப்பாடுகள் எமக்குக் கிடைத்துள்ளன.

இப்படியான செயல்கள் தமிழர்களை மாசுபடுத்துபவையாகும். அவற்றை மேற்கொள்ளவேண்டாம் எனக்கோருகின்றோம்.

சிறுவர்களை வேலைக்கு அமர்த்தியிருப்போர் தொடர்பான தகவல்களைத் தந்துதவுமாறு பொதுமக்களை வேண்டுகின்றோம்.

- இப்படி அந்தத் துண்டுப் பிரசுரங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஒ)

## யாழ்.ஆஸ்பத்திரியில் மலசலகூடச் சீர்கேடு

யாழ்ப்பாணம்,ஓக.28

யாழ்.போதனா வைத்தியசாலையில் மலசலகூடங்களில் சீரற்ற நீர்விநியோகத்தின் காரணமாக பெரும் சுகாதாரச் சீர்கேடு ஏற்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மலசலகூடங்களில் உள்ள நீர்விநியோகக் குழாய்களில் பெரும்பாலான நேரங்களில் தண்ணீர் வருவதில்லை எனவும்-

தினமும் ஓரிரு தடவைகள் குறிப்பிட்ட நேரம் மட்டுமே நீர் வருவதால் அவற்றைத் தேக்கிவைக்கக்கூடிய வசதியில்லை எனவும் -

அவ்வாறு தேக்கிவைத்தாலும் சிலர் அதனை வீண்விரயமாக்குவதால் தண்ணீர்ப் பற்றாக்குறை ஏற்படுவதாகவும் -

தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனகாரணமாக மலசலகூடங்களுக்குச் செல்லும் நோயாளர்களும் அவர்களுடன் தங்கிநிற்போரும் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். அத்துடன் பெரும் சுகாதாரச் சீர்கேடும் அங்கு நிலவுகிறது.

இதேவேளை - யாழ்.ஆஸ்பத்திரியில் மலசலகூடங்களைப் பயன்படுத்துவோர் அவற்றை துப்புரவாக வைத்திருக்க உதவினால் நிலைமையை ஓரளவு சீர்ப்படுத்தலாம் என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

(ஒ-10-15)

## மின்விநியோக விஸ்தரிப்புக்கு நிதியின்மையே இடையூறு!

### யாழ். அதிகாரி தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஓக.28

யாழ்.குடாநாட்டில் மின் இணைப்புப் பெறாத பிரதேசங்களுக்கு மின்விநியோகத்தை விஸ்தரிப்பதற்கு மின்சாரசபையிடம் போதிய நிதி இல்லை என்று மின்சாரசபையின் யாழ். பிரதிப் பொது முகாமையாளர் எஸ்.முத்துரட்ணானந்தம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்:-

குடாநாட்டில் மின் இணைப்பைப் பெற்றும் இதுவரை மின்மானி பொருத்தப்படாத வீடுகளுக்கு, மின்மானிகளைப் பொருத்தும் நடவடிக்கை அடுத்த வாரம்முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது. மின் இணைப்பைப் பெறாத பிரதேசங்களுக்கு மின் விநியோகத்தை விஸ்த்தரிப்பதற்கு, நிதிப் பற்றாக்குறை பெரும் இடையூறாக உள்ளது. எனினும், சில பகுதிகளில், கட்டம் கட்டமாக மின்சாரத்தை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்கிய சில நூறு கோடி ரூபாக்களிலேயே இந்தப் பணிகளை தற்போது மேற்கொண்டு வருகிறோம். புத்தூர், அளவெட்டி பகுதிகளுக்கு மின் இணைப்புகளை வழங்குவதற்கு துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தொடர்ந்து, அராலி தெற்கு, நீர்வேலி, கரந்தன், நிலாவரை, வாதரவத்தை மற்றும் ஆவரங்கால், மாகியப்பிட்டி, குப்பிளான் போன்ற பகுதிகளுக்கான மின்விநியோக வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளது - என்றார் அவர்.

(ஒ-9)

## வறிய மாணவர்களுக்கு இந்துமாமன்றம் உதவி

ஜி.சீ.ஈ. சாதாரணதரம் அல்லது உயர்தர வகுப்புகளில் கல்வி கற்று இப்போது தொழில்சார் கல்விகற்கும் அல்லது கற்கத் திட்டமிட்டிருக்கும் இந்து மாணவர்களுக்கு உதவி செய்ய நடவடிக்கை மேற்கொண்டுவருவதாக அகில இலங்கை இந்துமாமன்றம் அறிவித்துள்ளது.

இந்த உதவியைப் பெறுவதற்குத் தகுதியானவர்கள் அகில இலங்கை இந்துமாமன்றம், 91/5, சேர் சிற்றம்பலம் ஏ.கா்டினா மாவத்தை, கொழும்பு - 2 என்ற முகவரியில் அல்லது 344720 என்ற தொலைநகலுடன் தொடர்புகொண்டு விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்று மன்றத்தின் பொதுச் செயலாளர் கந்தையா நீலகண்டன் தெரிவித்துள்ளார்.

(ஒ)

# 60வயது நபரும் மாணவியும் ஆளற்ற வீட்டில் துர்நடத்தை!

## கலாசாரத்தைப் பேணுவோரிடம் சிக்கினர்

கொடிகாமம்,ஓக.28

ஆள்கள் இல்லாத வீடொன்றினுள் 4 பிள்ளைகளின் தந்தையான 60 வயதுடைய நபரும், 17 வயது மாணவி ஒருத்தியும் துர்நடத்தையில் ஈடுபட்டிருந்தபோது பிடிபட்டு கலாசாரத்தைப் பேணும் இளைஞர்களிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

கடந்த சனிக்கிழமை மீசாலையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் இச்சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

சம்பந்தப்பட்ட நபரும், மாணவியும் ஆள் நடமாட்டமற்ற வீடொன்றின் முன்பாக சம்பவதினத்தன்று நீண்டநேரமாக நின்றிருந்தனர். இவர்களில் சந்தேகம் கொண்ட அவ்வூர் இளைஞர்கள் சிலர் அவ்விருவரையும் நோட்டமிட்டுச் சென்றனர்.

சிறிதுநேரம் கழித்து இளைஞர்கள் அப்பகுதிக்குத் திரும்பி வந்தனர். அங்கு அவர்கள் இருவரையும் காணவில்லை. ஆனால், இரண்டு சைக்கிள்கள் மட்டும் வீட்டின் பக்கத்தில் நிறுத்தப்பட்டிருப்பதைக் கண்டனர்.

விடயத்தை ஊகித்தறிந்த இளைஞர்கள், தென்மராட்சியில் கலாசாரத்தைப் பேணுவதில் அக்கறைகொண்ட இளைஞர் குழுவினரிடம் இதுகுறித்து முறையிட்டனர்.

அதனைத் தொடர்ந்து அவர்கள் அனைவரும் குறிப்பிட்ட வீட்டுக்கு விரைந்து சென்று துர்நடத்தையிலீடுபட்டிருந்த நபரையும் மாணவியையும் கையும்மெய்யுமாகப் பிடித்தனர்.

பின்னர் இருவரையும் விசாரித்த கலாசாரத்தைப் பேணும் இளைஞர் குழுவினர், மாணவியின் பெற்றோரை அழைத்து அவர்களிடம் மாணவியை ஒப்படைத்தனர். சம்பந்தப்பட்ட நபருக்குக் கடுமையான அறிவுரை வழங்கப்பட்டது.

சம்பந்தப்பட்ட நபரின் பிள்ளைகளில் 3பேர் புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வசிப்பதாகவும் -

ஒரு பிள்ளை மற்றும் திணைக்களம் ஒன்றில் பணியாற்றும் மனைவி ஆகியோருடன் அந்த நபர் வசித்து வந்ததாகவும் - கூறப்படுகிறது.

இதேசமயம் சம்பந்தப்பட்ட மாணவி, அல்லாரைப் பகுதிப் பாடசாலை ஒன்றில் ஜி.சி.ஈ.சாதாரணதர வகுப்பில் கற்று வருபவர் என்று தெரியவந்துள்ளது.

(ஒ-ரி)

### நாளை

ஆவணி 13
வியாழக்கிழமை
(29.08.2002)
திதி : ஷஷ்டி
பிற்பகல் 2.48வரை.
நட்சத்திரம்: பரணி
முன்னிரவு 8.51 வரை.
சுபநேரம் : 7.31 - 9.05
ராகுகாலம்: 1.35 - 3.05
(பழைய நேரப்படி)

### உதய வாக்கு

கல்வி அளவுக்கு மீறி அதிகமானாலும் மிகக் குறைவாக இருந்தாலும் உள்ளத்தின் வளர்ச்சிக்கு ஊறுசெய்கிறது.

**2ஆம் வருட முகாமைத்துவ மாணவர்களுக்கான**

**கலந்துரையாடல்**

விடயம் : கல்விச் சுற்றுலா

இடம் : MHz

காலம் : 03-09-2002 செவ்வாய்க்கிழமை
காலை 10மணி

*2ஆம் வருட முகாமைத்துவ பிரதிநிதி*
*யாழ்.பல்கலைக்கழகம்.* (7581)



## 31ஆம் நாள் நீங்காத நினைவுகளில்

தோற்றம் 15 - 08 - 1978



மறைவு 29 - 07 - 2002

**அமரர் கனகநாயகம் ஜெயபிரகாஸ்**

வாடாத மலராய் வந்துதித்த பிரகாஸ்!
வளமான பொறுப்புடன் வழிதேடிச் சென்ற நீ
சீரும் சிறப்புமாய் வாழ்வோம் என எண்ணுகையில்
சீர்குலைய வைத்ததே கலோ என்ற பேரிடி - இது
பொய்யா மெய்யா, மெய்யா பொய்யா என்று
புலம்பித் தவித்தோமே! உன் எழில் உடல் காண
விடையேதும் கிடையாது விழிநீர் வடியுதே!
வேதனைகள் தந்துவிட்டு சொல்லாது சொல்லாது
சென்று விட்டாயே!

இன்று (28-08-2002) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் சமய நிகழ்வுகளிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் வேண்டிக கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*புதுக்கடை, அல்வாய் கிழக்கு,*
*அல்வாய்.* (7559)

உன் பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்


## பொன்விழா நிகழ்வு

வலி.மேற்கு,ஓக.28

வட்டு.வடக்கு, சித்தன்கேணி கற்பகச்சோலை சனசமூக நிலையத்தின பொன்விழா எதிர்வரும் சனிக்கிழமை மாலை 5 மணியளவில் சனசமூக நிலைய முன்றிலில் நடைபெறவுள்ளது.

சனசமூக நிலையத் தலைவர் வே.புலேந்திரன் தலைமையில் நடைபெற இருக்கும் இவ்விழாவிற்கு வலிகாமம் மேற்கு பதில் பிரதேச செயலர் செ.இரத்தினம் பிரதமவிருந்தினராகவும், வலி.மேற்கு பிரதேச சபை செயலாளர் திருமதி சா.சிவானந்தராசா சிறப்புவிருந்தினராகவும் கலந்து கொள்வர். கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (3-175)

## அநுராதபுரம்-மன்னார் வீதி விரைவில் திறப்பு

கொழும்பு,ஓக.28

அநுராதபுரம்-மன்னார் வீதியைத் திறக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக நாடாளுமன்ற விவகார அமைச்சர் ஏ.எச்.எம்.அஸ்வர் தெரிவித்துள்ளார்.

இப்பாதை திறக்கப்படுவதாயின் இந்த இரண்டு நகரங்களுக்கும் இடையிலான தற்போதைய பயணதூரம் 60மைல்களாகக் குறையுமென்றும் தெரிவிக்கப்பட்டது. (ம)

## விவசாயிகளுக்கு சீடா உதவி

விவசாயிகளின் தேவைகளுக்கு விநியோகிக்கவென சீடா திட்டத்தின கீழ் ஐந்து றொபின்சன் ரக நீரிறைக்கும் இயந்திரங்கள் உடுவில் கமநல கேந்திரநிலையத்துக்கு வழங்கப்பட்டுள்ளன. இவ்வியந்திரங்களை பெற விரும்பும் விவசாயிகள் உடுவில் கமநல கேந்திர பெரும்பாக உத்தியோகத்தர் வி.இளங்குமரனுடன் நேரடியாக தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (3-152)

## திருத்தம்

கடந்த 26ஆம் திகதிய உதயனில் 11ஆம் பக்கத்தில் 'யாழ்.குடா-காரைநகர் மக்களுக்கு நன்றி நவிலலும் நற்செய்தியும்' என்ற தலைப்பில் வெளியான விளம்பரத்தில் 'KQDO ஆஸ்பத்திரி வீதி, காரைநகர்' என்பதற்கு பதிலாக 'ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்' என தவறுதலாகப் பிரசுரமாகிவிட்டது. இதைத் திருத்தி வாசிக்கவும். (ஆ-ர்)

## போக்குவரத்துத் தொடர்பாகக் கட்டுரைப் போட்டி

தேசிய போக்குவரத்து ஆணைக் குழுவினால் பாடசாலை மாணவர்களிடையே போக்குவரத்துத் தொடர்பான ஆங்கில கட்டுரைப் போட்டி நடத்தப்படவுள்ளது.

"பாதசாரிகளின் பயணமும் போக்குவரத்து விபத்துகளும்" என்ற தலைப்பிலும, "மாணவர் போக்குவரத்து பிரச்சினைகளும் தீர்வுகளும்" என்ற தலைப்பிலும் இக்கட்டுரைப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

மாணவர்களின் ஆக்கங்கள் பாடசாலை அதிபர்களினால் உறுதிப்படுத்தப்பட்டு எதிர்வரும் செப்ரெம்பர் 15 ஆம் திகதிக்கு முன்னர் பீ.எம்.குணரத்தின பண்டா, பணிப்பாளர் நாயகம், தேசிய போக்குவரத்து ஆணைக் குழு, 241, பார்க் வீதி, கொழும்பு - 05 என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு தென்மராட்சி வலயக் கல்வி பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (3-117)







விலை 14/=




சுடர் ஒளி வாரப்பத்திரிகையின் விலை
3ருபாவால் குறைக்கப்பட்டுள்ளது.
உங்கள் முகவரிடம் கேட்டுவாங்குங்கள்.

# சுடர் ஒளி

## ஓகஸ்ட் 27 இதழில்

- லண்டனில் நடந்த தமிழர் விளையாட்டு விழா
- புலிகளின் கடல் வழிப் பயணம் இழுத்தடிப்புக்குப் பின் ஆரம்பம்
- ஈழத்தலைநகரில் நிகழ்ந்த அடிதடி சமாதான சூழ்நிலைக்கு பேரிடி.
- பொதுஜன ஐக்கிய முன்னணியைப் பிளந்த 18ஆவது அரசமைப்புத் திருத்தம்
- அரங்கேறப்போகும் அரசு - புலிகள் பேச்சு
- பிரதிநிதிகள் என்று போனவையை நடுறோட்டில் நிற்க வைத்த கொடுமை - தேரடி
- சமாதானத்தை நோக்கிய மற்றொரு நகர்வு கைதிகள் பரிமாற்றம்
- உள்ளூராட்சித் தேர்தல் அறிவிப்பு மீண்டும் ஏற்படுத்திவரும் சலசலப்பு
- 1958 கலவரம் ஈழத்தமிழர் வரலாற்றில் பெரும் திருப்புமுனை
- ஆந்தையாரின் க்ரைம் டயரி
- அலைகளின் காவியம்

மற்றும் சினிமா, விளையாட்டு, இணையத்தளத்திலிருந்து, சிறுவர் சுடர், மசாலா மிக்ஸ், கவிதைப் புனல் உட்பட பல்வேறு அம்சங்கள்.

(C232976)

# சிறந்ததோர் ஊடகம் வீணாக சமூகத்தைச் சீரழிக்கும் அவலம்!

அதிகரித்துவரும் தொலைக்காட்சிப் பயன்பாட்டால் சீரழியும் யாழ். சமூகத்தைச் சீர்படுத்துவது எவ்வாறு எனும் கவலை இன்று கல்விமான்கள், சமூகவியலாளர்கள் மத்தியில் தோன்றியுள்ளது.

கிராமங்களில் உள்ள கொட்டில் வீடுகளில்கூட 'அன்ரனா' பூட்டப்பட்டிருக்கும் நிலை உருவாகி உள்ளது. அவ்வாறு தொலைக்காட்சிப்பெட்டி வைத்திருக்க வசதியற்றோர் குறைந்தது வாரம் இருதடவைகளாவது வாடகைக்கு 'ரி.வி., டெக்' பெற்று விடிய விடிய விழித்திருந்து திரைப்படங்களைப் பார்ப்பதையும் காணமுடிகிறது.

1920களில் தொலைக்காட்சிப் பெட்டி உலகில அறிமுகம் செய்யப்பட்டபோது அதன் பயன்கள் அதிகம் என்றும், உலகில் பாரிய ஓர் ஊடகமாகவும், வெகுஜனத் தொடர்பு சாதனம் என்றும் குறிப்பிடப்பட்டது. ஆனால், இன்று உலகளாவிய ரீதியில் இவை அதிகம் தீங்குகளையே விளைவித்து வருகின்றன. இதனைப் பல்வேறு ஆய்வுகளும் எடுத்தியம்புகின்றன.

1980களில் இலங்கைக்கு அறிமுகமான தொலைக்காட்சிப் பெட்டிகள் இரண்டு தசாப்தங்களுக்குள்ளாகவே மக்களின் பெரும்பாலான நேரத்தை விழுங்கும் சாதனமாக உருப்பெற்றுவிட்டது. பாமர மக்களும் விளங்கிக்கொள்ளக்கூடிய வகையில் அறிவியலைப் புரிந்துகொள்ள வைக்கும் ஊடகமாகவே தொலைக்காட்சிப்பெட்டி அறிமுகமானது. ஆனால், இன்று எமது மக்கள் மத்தியில் பொழுதுபோக்கிற்கு மட்டுமே பயன்படும் ஒன்றாக அதுமாறியுள்ளது.

யாழ்.மாவட்டத்தைப் பொறுத்தவரையில் கல்வி, கலாசாரம் என்பன

## தொடர்ந்து ரி.வி. பார்ப்பதால் உள்ளமும் உடலும் ஒருங்கே கெடும்

பெரிதும் சீர்கெட்ட நிலையை எய்தி வருகின்றமைக்கு திரைப்படங்கள் பிரதான காரணியாக அமைகின்றன.

### பெறுபேறுகள் வீழ்ச்சி

அண்மையில் வெளிவந்த ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை முடிவுகளும் சரி அதற்கு முன்வந்த ஜி.சீ.ஈ. சாதாரணதர முடிவுகளும் சரி கல்விமான்கள் மத்தியில் பெரும் அதிருப்தியை அளிப்பதாகவே அமைந்திருந்தன.

முன்னர் குப்பி விளக்கில் படித்த மாணவர்கள் பெற்ற பெறுபேறுகளுடன் ஒப்பிடும்போது இன்று மின்சார வெளிச்சத்தில் படிக்கும் மாணவர்களின் பெறுபேறுகள் முன்னேற்றகரமாக அமையவில்லை என்றே கூறப்படுகிறது.

நகரப்புறங்களுக்குப் படிப்பதற்கு வருபவர்களில் பலர் திரையரங்குகளிலும் மினிசினிமாக் கொட்டகைகளிலுமே தமது பெரும் பொழுதைக் கழித்துவிட்டுச் செல்கின்றனர்.

இத்தனை அழிவுகளைத் தாங்கி, கஷ்டங்களை அனுபவித்தபோதும் குடாநாட்டு மக்கள் கல்வியைத் தரம் குறையவிடாது பேணிவருவதாக தென்னிலங்கையிலிருந்து வருவோர் கூறும்போது சந்தோஷப்படுகிறோம்.

ஆனால், 1995ஆம் ஆண்டுக்கு முன்தான் யாழ்ப்பாணம் பெரும் யுத்த பூமியாக இருந்ததையும் -

அப்போது வந்த பரீட்சைப் பெறுபேறுகளுடன் ஒப்பீடும்போது இப்போதைய பெறுபேறுகள் படுமோசமாக அமைந்திருந்திருப்பதையும் நாம் எண்ணிப்பார்க்கத் தவறிவிடுகிறோம்.

இன்று மின்சாரம் ஒழுங்காகக் கிடைக்கிறது. அதை நல்முறையில் ஆக்கபூர்வமாகப் பயன்படுத்துவோர் எத்தனை பேர்? யாழ்.மாவட்டத்தில் தினமும் 3ஆயிரத்துக்கும் அதிகமான வீடியோப்படப் பிரதிகள் வாடகைக்கு விடப்படுகின்றனவாம். இந்தத்தொகை மின்சாரம் சீராகக் கிடைப்பதற்கு முன் வாடகைக்குப் போன தொகையிலும் இரண்டு மடங்கு அதிகமாகும். இதன்மூலம் மின்சாரம் ஒழுங்காகக் கிடைக்கத் தொடங்கியதும் அதனை அதிகம் பேர் வீணடிப்பதற்காகவே பயன்படுத்துவதை உணரமுடிகின்றது.

இன்று யாழ். மாவட்டத்தில் 10 வீட்டுக்கு ஒரு தொலைக்காட்சிப் பெட்டி என்ற வீதத்தில் உள்ளது.

திரைப்பட வீடியோ, ஓடியோ பிரதிகள் விநியோகம் அதிகரித்துள்ளது. இது மாணவர் மத்தியில் கல்வி நாட்டத்தைக் குறைத்து வேறுதிசைகளில் அவர்களை இழுத்துச் செல்கின்றது.

### தவறிப்போகும் கடமைகள்

பெற்றோர், மாணவர் தமது அன்றாடக் கடமைகளைச் செய்வதில் காலதாமதத்தையும், சிக்கல்களையும் தோற்றுவிப்பதில் தொலைக்காட்சி பெரும்பங்காற்றுகின்றது.

குறிப்பாக பாடசாலை விட்டு வந்ததும் மாணவர்கள் பலர் திரைப்படத்தையோ அல்லது ஒளிபரப்பாகும் நாடகங்களையோ பார்ப்பதற்காக உணவைக்கூட சரியாக உண்பதில்லை, அத்துடன் பாடசாலையில் கொடுத்துவிடப்படும் வீட்டுப்பாடங்களைச் செய்வதை மறந்துவிடுகின்றனர்.

குறிப்பாக இரவில் தமது கடமைகளைச் செய்யலாம் என்று ஒதுக்கிவிட்டு எல்லாக் கடமைகளையும் இரவில் செய்யமுடியாது உறங்கிவிடும் மாணவர்கள் இறுதியில் கல்விமீது வெறுப்புக்கொள்கின்றனர். கல்வியைக் கடினமான ஒன்றாகக் கருதுவதால் கல்விக் கனவுகளை கோட்டைவிட வேண்டிய நிலை உருவாகின்றது.

பெண்கள் இவ்வாறு நாடகத்திற்கும், திரைப்படத்திற்கும் அடிமையாவதால் குடும்பவாழ்வில் சிக்கல்கள் உருவாக நேரிடுகின்றது.

குறிப்பாக வேலைக்குச் சென்று திரும்பும் கணவரைக் கவனிக்காது தம் நினைவை முழுவதுமாக தொலைக்காட்சியில் செலுத்துவதால் கணவன் மனைவியிடையே ஐக்கியம், உறவு என்பன பாதிப்படைகின்றன. இதனால் குடும்பங்கள் பிரிவடைவதற்கான சந்தர்ப்பத்தைக்கூட தொலைக்காட்சிப்பெட்டிகள் ஏற்படுத்திவிடுகின்றன.

### கலாசாரப் பாதிப்பு

எம்மத்தியில் இன்று தீனா குறூப், ரெட் குறூப், கேம் குறூப் எனப் பல்வேறு குழுக்களையும் காண்கிறோம். இவை சினிமாவில் தோன்றும் கதாபாத்திரங்களைப்போல் தம்மைப் பிரதிமை செய்கின்றன.

இவை பெரும்பாலும் சமூக விரோதச் செயல்களிலேயே ஈடுபட்டு வருகின்றன.

திரைப்படத்தில் தோன்றும் கதாநாயகன் வில்லன்போல் தோன்றி சமூகத்திற்கு நல்லது செய்வதாகவே சித்திரிக்கப்படும். ஆனால், திரைப்படப் பெயர் சூடிக்கொண்ட இந்தக் குழுக்களோ செய்வதுயாவும் பெண்களுடனான சேஷ்டைகள், அடிதடி மற்றும் மது அருந்துதல், சந்திகளில் கூச்சலிடுதல், வீதிகளைத் தடைசெய்து நின்று சண்டித்தனம் புரிதல் முதலானவையாகும். இத்தகைய செயல்கள் அதிகரிப்பதில் தொலைக்காட்சி அதிகம் செல்வாக்குச் செலுத்துகின்றது.

சினிமாவில் வரும் கதாநாயகி அணியும் உடையை அழகென எண்ணியோ என்னவோ பெண்களும் தமது ஆடைகளை அரைகுறையாக அணிகின்றனர்.

எமது பாரம்பரிய கலாசாரத்திற்குப் புறம்பான, அத்தகைய உடைகளை அணியும் பெண்களை பொது இடங்களில் காணமுடிவது எமது சமுதாயத்திற்கு இழுக்கே.

சிறுபிள்ளைகள்கூட இன்று பாடசாலைகளில் நாடகத் தொடர்களைப் பற்றியே பேசிவருவதனையும், அவற்றின் உரையாடல்களைப் பேசிக் காட்டுவதையும் காணமுடிகின்றது.

தலைமுடியை அலங்கோலமாக வெட்டுவதுடன் ஆண்கள்கூட தோடணிவதையும் காணமுடிகின்றது. வெளிநாடுகளில் ஓரினச் சேர்க்கையாளர்களான ஆண்களே தோடு அணிவது வழக்கம். ஆனால், அது தெரியாது. திரைப்படங்களைப் பார்த்து தம்மைத் தாமே தரங்குறைத்துக் கொள்கின்றனர். நமது இளைஞர்கள் கொலை, கொள்ளை முதலானவற்றிற்குக்கூட



தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் பல புதிய வழிகளைக் கற்றுக்கொடுக்கின்றன. இதனாலேயே இன்று யாழ்ப்பாணத்தில் இத்தகைய செயல்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன.

### உடல்ரீதியான பாதிப்பு

பெற்றோர்கள் சிறுபிள்ளைகளை ஓரிடத்தில் இருத்தி தொலைக்காட்சியை இயங்கவிட்டு தம் கடமைகளைச் செய்வதற்காக சென்றுவிடுகின்றனர். இதன்மூலம் பிள்ளைகளின் உடல், உளச் செயற்பாடுகள் தொலைக்காட்சிக்குள்ளேயே ஒன்றிவிடுகிறது. பிள்ளைகளின் உற்சாகம் இதனால் கட்டுப்படுத்தப்படுகின்றது. உண்மையில் பிள்ளைகளின் உற்சாகம் குன்றுவதற்கும், அவர்களது மூளைவிருத்தியில் பாதிப்பை ஏற்படுத்துவதற்கும் தொலைக்காட்சிகள் காரணமாகின்றன. அத்துடன் சிறுகுழந்தைகளின் கண்பார்வையைக் கெடுப்பதாகவும் தொலைக்காட்சிகள் அமைகின்றன.

இன்று யாழ். குடாவில் 25 வீத மாணவர்கள் மூக்குக் கண்ணாடி பயன்படுத்தும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இவர்களில் பெரும்பாலானவர்களது பார்வைக் குறைபாட்டுக்கு தொடர்ந்து தொலைக்காட்சி பார்த்ததே காரணமாக கூறப்படுகின்றது.

### வெளிநாடுகளிலும்

எமது நாட்டில் மட்டுமன்றி வளர்ச்சியடைந்த நாடுகளில்கூட இந்த நிலை காணப்படுகின்றது.

மக்கள் களியாட்ட நிகழ்ச்சிகளையே அதிகம் பார்க்கின்றனர். கனடா, அமெரிக்கா, பிரிட்டன் போன்றவற்றில் செய்திக்கெனவும், விளம்பரத்திற்கெனவும், பாலியல்கல்விக்கெனவும், திரைப்படத்திற்கெனவும் தனித்தனியே ஒளிபரப்புச் சேவைகள் உள்ளன. இவற்றில் செய்திச் சேவைகளில் குறைந்த எண்ணிக்கையான மக்களே ஆர்வம் காட்டுகின்றனர்.

ஆப்கான் மீதான யுத்தம் நடந்து கொண்டிருந்த சமயம் பல அமெரிக்கர்கள் தொலைக்காட்சிச் செய்தி

**செந்தூர்ராஜ்**

களை அதிகம் விரும்பிப்பார்த்தனர். ஆனால் அந்தச் செய்திகள் பரபரப்பாகக் குறிப்பிடப்பட்ட ஒஸாமா பின் லேடனைப்பற்றி அமெரிக்காவில் மூன்றில் இரண்டு பங்கினர் அறிந்திருக்கவில்லை. தொலைக்காட்சி பயன் வீணடிக்கப்படுவதற்கு, இது ஓர் உதாரணம்.

பிரிட்டிஷ் பத்திரிகையாளரான அலெக்சாண்டர் கொக்போன் கூறுகையில் கனடா, அமெரிக்கா போன்ற நாடுகளில் களியாட்டங்களுக்குக் கொடுக்கப்படும் முக்கியத்துவம் செய்திகளுக்குக் கொடுக்கப்படுவதில்லை. உதாரணமாக 1991இல் அமெரிக்கா ஈராக்மீது தாக்குதல் நடத்தியவேளை ஈராக் அதிபர் சதாம் ஹுசேன், பலஸ்தீனத்தை இஸ்ரேல் ஆக்கிரமித்தபோது பார்த்திருந்த அமெரிக்கா, குவைத் விடயத்தில் தலையிடவேண்டிய அவசியமில்லை' என்றார்.

இவ்வேளை மூன்றில் இரண்டு பங்கு அமெரிக்கர்கள் பலஸ்தீனப் பிரச்சினைபற்றி அறிந்திருக்கவில்லை. இதனால் அநேகமான அமெரிக்கர்களுக்கு சதாம் ஹுசேனின் கருத்து விளங்கவில்லை.

### பயன்பெறல்

உண்மையில் தொலைக்காட்சி மிக முக்கியமானதொரு வெகுஜன ஊடகசாதனம் இதனைத் தகுந்த முறையில் பயன்படுத்தினால் பயன் பெறலாம்.

இன்று ஆங்கிலம், சிங்களம் முதலான மொழிகளை சிறந்த உச்சரிப்புக்களுடன் பேசுவதற்கும் கற்பதற்கும் அந்த மொழித் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்ப்பது உதவும். தேவையற்ற நிகழ்ச்சிகளை விடுத்து வயதிற்கேற்ற பயனுள்ள நிகழ்ச்சிகளைப் பார்ப்பதன் மூலம் பயன்பெறலாம்.

எந்நேரமும் இதனுடன் நேரத்தைச் செலவுசெய்து உடலையும், உளத்தையும் கெடுத்துக்கொள்ளாது குறிப்பிட்ட நேரம் மட்டும் தொலைக்காட்சி பார்ப்பதன்மூலம் பயன்பெறலாம்.

எனவே இன்று தொலைக்காட்சிப்பெட்டியின்மூலம் சினிமா, நாடகங்கள் உட்பட பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளை மட்டும் பார்ப்பதை விடுத்து பயனுள்ள விடயங்களை பார்ப்பதன்மூலம் எமது நாட்டிலும் சிறந்ததொரு வெகுஜன ஊடகமாக, பயன்மிக்க சாதனமாக - தொலைக்காட்சி மிளிர்வதற்கு வாய்ப்பு ஏற்படுத்துவோம். ★

## கல்விச்சாலைக் காட்சிகள்



வடலியடைப்பு கிராம அபிவிருத்திச் சங்க முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா அண்மையில் நடைபெற்றது. அதில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந. ரவிராஜ் வெற்றியீட்டிய மாணவர்களுக்குப் பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம். இவ்விழாவிற்குத் தலைமை வகித்த சங்கத் தலைவர் க.அரசரத்தினமும் படத்தில் உள்ளார். (ஓ-135)



அரியாலை ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலையப் பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப் போட்டி சமீபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி யோகேஸ்வரி யோகராசா மங்கல விளக்கேற்றிய போது எடுத்தபடம்.



யாழ்.தேசியக் கல்வியியற் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வுக்கு வந்திருந்த பிரதமவிருந்தினர் கோப்பாய்ப் பிரதேச செயலர் கே. கேதீஸ்வரன், தேசியக் கல்வியியற் கல்லூரிப் பீடாதிபதி தி.கமலநாதன், சிறப்பு விருந்தினரர் ஈ.எஸ்.பீ. நிறுவன அதிபர் பீ.நாகரட்ணம் ஆகியோர் மலர்மாலை அணிவித்து மாணவர்களால் வரவேற்கப்பட்டபோது எடுத்த படம். (ஓ-180)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

பேக்கரி பாவனைக்கு உகந்த மூன்று வேப்பம் பலகையாலான மேசைகள், மரத்தினாலான சோக் கேஸ், பாண் அச்சுத் தட்டுகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல. 86, கோயில் வீதி, யாழ்ப்பாணம். T.P.:3818. (7554)

நல்ல நிலையில் வளர்க்கப்பட்ட இறைச்சிக் கோழிகள் (புறொயிலர்) விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ந.மோகனதாஸ், பெரியதம்பிரான் கோயிலடி, பொலிகண்டி மேற்கு, வல்வெட்டித்துறை. (7599)

மோட்டோறோலா தொலைபேசி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ஸ்ரீ ராஜ், சங்கரத்தை, வட்டுக்கோட்டை. (7524)

பல நிறங்களில் லவ்பேட்ஸ், ஜவாபரட், விஞ்சோஸ், ஆபிரிக்க லவ்பேட்ஸ் குருவிகள், புதிய இன வர்ண மீன்கள், மீன் தொட்டிகள், தொட்டிக்குரிய அனைத்துப் பொருள்களும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 40/17, சீனியர் லேன், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (7548)

நல்லூர் கோயில் வீதியில் மூன்று பரப்புக் காணியில் அமைந்த இரண்டு மாடி வீடுகள் உடனடியாக விற்பனைக்கு உண்டு. (கந்தன் கருணைக்கு அண்மையில்) தொடர்பு: திருமதி குமாரசாமி, 427, கோயில் வீதி., நல்லூர். (7577)

நல்லூர் கரும்பு வியாபார நண்பர்களே! எம்மிடம் நன்கு முற்றிய முதல்போக விளைச்சலான செங்கரும்பு விற்பனைக்கு உள்ளது. தொடர்பு: வை.பேரம்பலம், கரும்புத்தோட்டம், தலையாளி, கொக்குவில். (7566)

புதிய 100C ரக Daido மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: V.P.சண்முகநாதன், 68, குறோசர்லேன், நல்லூர், யாழ்ப்பாணம். (7575)

## காணி விற்பனைக்கு

கல்வியங்காட்டில் 1 1/2 பரப்புக் காணி பருத்தித்துறை வீதியிலிருந்து 200யார் தூரத்தில் 3 அறைகள், ஒரு சமயலறை, ஹோல் என்பவற்றுக் கான அத்திவாரத்துடன் மலசலகூடம்; மின்சாரவசதி, கிணறு, வாகனப் போக்குவரத்து வசதியும் உண்டு. விவரங்களுக்கு: க.அம்பிகபாகர், இல.38, சிவன்கோயில் றோட், திருநெல்வேலி தெற்கு. (7588)

## இறைச்சிக்கோழி விற்பனை

Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் சுகாதார முறைப்படி சுத்தம் செய்து (பாதிக்கோழி உட்பட) தினமும் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (7597)

## கோழிக்குஞ்சு விநியோகம்

Prima Broiler குஞ்சுகள், Prima பேட்டுக்குஞ்சுகள் 05.09.2002 வியாழக்கிழமை மாலை விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்யவும். முதல்நாள் மருந்து இலவசம். தொடர்பு: 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (7418)

அச்சுவேலிப் பண்ணையின் கோழிக்குஞ்சுகள் எதிர் வரும் 31.08.2002ஆம் திகதி விநியோகிக்கப்படும். புறொயிலர் 42/=, பேடு 37/=, சேவல் 5/= தேவையானோர் முழுப்பணத்தையும் செலுத்திப் பற்றுச் சீட்டைப் பெற்றுக்கொள்ளவும். தொடர்பு: 123, அம்பலவாணர் வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம். (7594)

## தேவை

கேபிள் தொலைபேசி லைன் உரிமை மாற்றம் செய்து விற்க விரும்பின் உடன் தொடர்புகொள்ளவும் விளம்பர இல.1613, C/o உதயன், யாழ்ப்பாணம். (7529)

## வேலையாள்கள் தேவை

சமையல் வேலைக்கு ஒரு பெண்ணும் மற்றும் வேலைகளுக்கு ஓர் ஆணும் தேவை. தங்கியிருக்க வேண்டும். சாப்பாடும் நல்ல சம்பளமும் தரப்படும். நேரில் வரவும். தொடர்பு: தனபாலசிங்கம், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (7598)

## தவறிவிட்டது

கனகசபாபதி மயூரன் என்பவரது தேசிய அடையாள அட்டை (இல. 792364160V) யாழ்நகரப் பகுதியில் 22.08.2002 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கனகசபாபதி, குளக்கண்டி லேன், கட்டப்பிராய் என்ற முகவரியில் ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும். (7593)

அச்சுவேலி வடக்கைச் சேர்ந்த இரத்தினம் கலாஜினி என்பவருடைய தே.அ.அ. (இல.785590872V) நாச்சிமார் கோயிலடிக்கும் இந்து மகளிர் கல்லூரிக்கும் இடையில் 15.08.2002 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் S.மகாலிங்கம், விஜிதா மில்லடி, வல்லை வீதி, அச்சுவேலி என்னும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். (7592)

வேலணை, துறையூரைச் சேர்ந்த சண்முகம் லோகேஸ்வரன் என்பவரது தே.அ.அ. (இல.722113837V) கடந்த வாரம் அல்லைப்பிட்டி சோதனைச்சாவடிக்கும் துறையூருக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் யாழ்.சத்திரத்துச் சந்திக்கு அருகில் உள்ள சிறிமாரி நகைமாடத்தில் ஒப்படைத்து உதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (7540)

ஆனந்தமோகன் கமலாம்பிகை என்பவரது தேசிய அடையாள அட்டை (இல. 647830919V), விசேட அடையாள அட்டை (0905009637) என்பன தெல்லிப்பழை துர்க்கையம்மன் கோயிலில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் ந.ஆனந்தமோகன் சுதுமலை தெற்கு, மானிப்பாய் என்ற முகவரியில் ஒப்படைத்து உதவவும். (7556)

## எங்கள் நாடு

350 நாடகங்கள் எழுதிய அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையின் பரிசுபெற்ற இலங்கை வானொலி நாடகங்கள். எங்களது இன்றைய வாழ்வைச் சித்திரிக்கும் நாடகங்கள். 119 பக்கங்கள், 7 நாடகங்கள். ரூபா 75/=. (7519)

## தொடர்புகொள்ளவும்

கோழி, கால்நடைகள் வளர்க்கும் முறைகளைப் படித்துத் தெரிந்துகொள்வதற்கு ஆர்வமுள்ள பிள்ளைகள் எம்முடன் தொடர்புகொள்ளவும். தனபாலசிங்கம், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (7600)

## யாழ்.நகரில் மீண்டும் சிங்கள சிற்றுண்டிகள்

இணுவில்,ஓக.28

ஏ-9 தரைவழிப்பாதை திறக்கப்பட்டதை அடுத்து தெற்கிலிருந்து பெரும் எண்ணிக்கையிலானவர்கள் யாழ்ப்பாணத்துக்கு வருகின்றனர். இதேவேளையில் பல வருடங்களுக்கு முன்பிருந்ததைப் போன்று சிங்கள மக்களின் சிற்றுண்டி உணவு வகைகளையும் யாழ்ப்பாணத்தில் காணமுடிகிறது.

தென்பகுதியில் இருந்து வந்துள்ள சிங்கள மக்களில் சிலர் யாழ். நகரத்தை அண்டிய பகுதிகளில் தங்கியிருந்து சிற்றுண்டி வகைகளைத் தயாரித்து, சிற்றுண்டிச்சாலைகளுக்கும், உணவுக்கடைகளுக்கும் விநியோகித்து வருகின்றனர். விரைவில் அவர்கள் பேக்கரிகளை யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்க இருப்பதாகவும் தெரியவருகிறது. (ஒ-ரி)

## திலீபனின் நினைவுதின பதாகைகள்

கரவெட்டி,ஓக.28

வடமராட்சியில் லெப்ரினன்ட் கேணல் திலீபனின் 15ஆவது நினைவு தினத்தைக் குறிக்கும் பதாகைகள் தொங்கவிடப்பட்டுள்ளன.

தியாகதீபம் திலீபனின் நினைவு தினம் அடுத்த மாதம் 15ஆம் திகதி முதல் அனுஷ்டிக்கப்படவுள்ளது. இதற்கான ஒழுங்குகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ஒ-70)


## படிவம்

கிராம உத்தியோகத்தர் தரம் II இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சை விண்ணப்பப்படிவம் [illegible] G.C.E. (O/L) 4 பாடங்களில் திறமைச் சித்தி [illegible] உண்டு (C/23310)

BHARATHI PATHIPPAHAM OFF SET PRINTERS
430, K.K.S. ROAD, JAFFNA. PHONE: 021-3001



அச்சுவேலியில்
கணனி வகுப்புகள்
Dip.in.Ms Office
பிரிவு II ஆரம்பம்
31-08-2002 9.00a.m.
CIIT
(ஆங்கிலக் கல்லூரியில்)
சந்நிதி வீதி, அச்சுவேலி.
ஆய்வுக்கட்டுரைகள்:
24 மணிநேரத்தில் கணனியில் ரைப்செய்து கொடுக்கப்படும். (7601)


## தவறிவிட்டன

24.08.2002 அன்று 769ஆம் இலக்க மினிபஸ்ஸில் நாச்சிமார் கோயிலடிக்கும் யாழ்.பஸ் நிலையத்திற்கும் இடையில் பின்வரும் நகைகள் தவறிவிட்டன. 'காப்பு - 2சோடி, கல் அட்டியல் 1, பதக்கம் 1, நெக்லஸ் 2, கைச்செயின் 1, சங்கிலி 2, மோதிரம் 1' இவற்றைக் கண்டெடுத்தவர்கள் அல்லது இவை பற்றிய தகவல் தருபவர்கள் அ.பரஞ்சோதி 48, சென். பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணம். (T.P.: 021-3332) என்ற முகவரியில் தொடர்புகொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (7588)

## 31ஆம் நாள் நினைவு அஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு 20 ★ 06 ★ 1937



உதிர்வு 30 ★ 07 ★ 2002

### திருமதி ஈஸ்வரநாதன் சிவபாக்கியம்

அன்பின் திருவுருவே!
பண்பின் உறைவிடமே!!
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

எமது அன்புத்தெய்வம் இறைபதம் எய்திய செய்திகேட்டு, பலவழிகளிலும் உதவிகள் செய்து; ஆறுதல் கூறியும் தந்தி, தொலைபேசிமூலம் அனுதாபம் தெரிவித்தும், இறுதியாத்திரையிலும் கலந்துகொண்ட எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எங்கள் உளம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன், நாளை (29.08.2002) வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்திலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

*"பூங்குன்றம்"*
*உடுவில் தெற்கு,*
*புளியடி வைரவர் கோயிலடி,*
*சுன்னாகம்.*

பிரிவால் துயருறும்:
E. விஜயேந்திரன் (மகன் - சுவிடன்),
K. ஜமுனா (மகள் - சுவிஸ்),
சுந்தரமூர்த்தி (பேரமகன்).

(7538)

## இரண்டாவது பிறந்தநாள் வாழ்த்து

28-08-2002

HAPPY



BIRTHDAY

### செல்வன் சுகுமார் அனுஜன்

நோர்வேயில் வசிக்கும் திரு.திருமதி சுகுமார் - அகிலகௌரி தம்பதிகளின் செல்வப்புதல்வன் **செல்வன் அனுஜன்** தனது இரண்டாவது பிறந்ததினத்தை இன்று (28-08-2002) புதன்கிழமை கோண்டாவில் கிழக்கில் உள்ள தனது இல்லத்தில் வெகு சிறப்பாகக் கொண்டாடுகின்றார்.

அனுஜனை சித்திவிநாயகர் அருள்பெற்று சீருஞ்சிறப்புடன் பல்லாண்டுகாலம் வாழ்கவென அப்பா, அம்மா, கனடாவில் வசிக்கும் அப்பம்மா மற்றும் அம்மப்பாமார், அம்மம்மாமார், பாட்டிமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார், சித்திமார், மாமாமார், மாமிமார், அண்ணாமார், அக்காமார், மச்சான்மார், மச்சாள்மார் ஆகியோர் வாழ்த்துகின்றார்கள்.

*கோண்டாவில் - நாவற்குழி* (C/23309) ஐ. சுகுமார் - அப்பா

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 15 - 08 - 1934



விண்ணில் 28 - 08 - 1999

### அமரர் கணபதி மார்க்கண்டு

*(ஓய்வுபெற்ற சாரதி, இ.போ.ச.)*

*ஆண்டுகள் மூன்று ஆனாலும்*
*எங்கள் நெஞ்சம் இருக்கும்வரை*
*உங்கள் நினைவுகள் இருக்கும் அப்பா!*

*அம்பாள் அகம்,*
*அளவெட்டி தெற்கு.* (7591)

துயருடன் நினைவுகூரும்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி அந்தோனியா சாமிநாதர்

*(இளைப்பாறிய ஆசிரியை, திருக்குடும்பக் கன்னியர்மடம், யாழ். மாநகரசபை முன்னாள் உறுப்பினர், சமாதான நீதிவான், Order of St.John)*

இல.150, பாங்ஷால் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திருமதி அந்தோனியா சாமிநாதர் நேற்று (27.08.2002) செவ்வாய்க்கிழமை காலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இசிதோர் சாமிநாதர் (இ.மி.சபை) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சவிரிமுத்து தம்பதியினரின் கனிஷ்ட புத்திரியும் நிக்கலீன் (ஜெயர் - சர்வதேச பிராந்திய பிரதிநிதி, திட்டப்பணிப்பாளர்), காலஞ்சென்ற வசந்தன் ஆகியோரின் அருமைத் தாயாரும் காலஞ்சென்றவர்களான திருமதி எலிசபெத் (அச்சுவேலி), யோசவ் சவிரிமுத்து, பீற்றர் சவிரிமுத்து ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்ற ஆசைப்பிள்ளை (அச்சுவேலி), காலஞ்சென்ற திருமதி மக்டலீன் ஜோசவ் மற்றும் திருமதி மாகிரேற் சவிரிமுத்து (இந்தியா, இளைப்பாறிய ஆசிரியை, திருக்குடும்பக் கன்னியர்மடம்), காலஞ்சென்றவர்களான திருமதி ஞானப்பிரகாசம், திருமதி அல்போன்ஸஸ், திருமதி நல்லையா, திருமதி இராஜேந்திரம், திரேசம்மா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அவரது இல்லத்திலிருந்து நல்லடக்க ஆராதனைக்காக இன்று (28.08.2002) புதன்கிழமை மாலை 3.30 மணிக்கு புனித மரியன்னை பேராலயத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு, திருப்பலி பூசையின் பின்பு புனித மரியன்னை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*150, பாங்ஷால் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (7589)

தகவல்:
நிக்கலீன்
(மகள்)

# திருமலை எண்ணெய்க்குதம்

**திருகோணமலையிலுள்ள பாரிய எண்ணெய்த் தாங்கிகளை இந்திய நிறுவனம் ஒன்று பயன்படுத்த இலங்கை அரசு அனுமதித்த விடயம் நாட்டில் பரபரப்பாகப் பேசப்பட்டது. திருமலை எண்ணெய்த் தாங்கிகள் குறித்து ஓய்வுபெற்ற அதிகாரி லெப்டினன்ட் கேணல் ஷேன் பல்தஸார் ஓகஸ்ட் 10ஆம் திகதிய 'டெய்லிமிரர்' பத்திரிகையில் எழுதிய கட்டுரையின் தமிழாக்கம் இங்கு பிரசுரமாகிறது.**

இரண்டாம் உலக மகா யுத்தகாலத்தில் தூரகிழக்குப் பகுதியில் ஜப்பானியப் படைகளின் அச்சுறுத்தல் காரணமாக பிரிட்டன், சிங்கப்பூரில் எண்ணெய்க்குதம் அமைக்கும் தனது திட்டத்தைக் கைவிட்டது. அதனால், பின்னர் பிரிட்டன் தனது தளம் அமைந்திருந்த திருகோணமலையை எண்ணெய்க்குதம் அமைப்பதற்குப் பொருத்தமான இடமாகத் தேர்ந்தெடுத்தது.




திருகோணமலை உலகிலேயே சிறந்த இயற்கைத் துறைமுகத்தைத் தன்னகத்தே கொண்டுள்ளது. அத்தோடு திருகோணமலைத் துறைமுகம்

## தமிழில்: லிங்கம்

இயற்யாகவே மிகுந்த பாதுகாப்பான இடமாகவும் கருதப்படுகிறது.

1957ஆம் ஆண்டு பிரிட்டிஷாரிடமிருந்து திருகோணமலைத் தளம் முற்றுமுழுதாக இலங்கை அரசின கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவரப்பட்டது.

திருகோணமலையில் இருந்த பிரிட்டிஷ்தளம் மூன்று பிரிவுகளைக் கொண்டிருந்தது.

பகுதி I: றோயல் கடற்படை கப்பற்றளம்.

பகுதி II: றோயல் வான்படை ஓடுபாதையும் சீனக்குடா முகாமும்.

பகுதி III: எண்ணெய்த் தாங்கிகள் அடங்கிய குதம்.

பிரிட்டிஷார் இலங்கையைவிட்டு வெளியேறிய பின்னர், இலங்கைக் கடற்படை கப்பல் தளத்தின் கட்டுப்பாட்டைப் பொறுப்பெடுத்தது. இலங்கை விமானப்படை ஓடுபாதை மற்றும் சீனக்குடா முகாம் கட்டுப்பாட்டைப் பொறுப்பெடுத்தது. இதேபோன்று துறைமுகத்தின் கரையோரமாக நூற்றிபொரு எண்ணெய்த் தாங்கிகளைக் கொண்டு அமைந்திருந்த எண்ணெய்க்குதத்தின் கட்டுப்பாட்டினை இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் பொறுப்பெடுத்தது.

இலங்கையில் முதலாவது பிரிட்டிஷ் தளம் 1794 - 1796இற்கு இடைப்பட்ட காலப்பகுதியில் திருகோணமலையில் அமைக்கப்பட்டது. அங்கு ஆசியாவிலேயே மிகவிசாலமான எண்ணெய்க்குதத்தினை 1938இல் நிறுவ பிரிட்டன் ஆரம்பித்தது. பின்னர், இரண்டாவது உலக மகாயுத்த காலப் பிற்பகுதியில் அதனைப் பூர்த்தி செய்தது. அப்போது 55 தாங்கிகள் மட்டுமே பாவனையிலிருந்தன. எனினும், 2ஆவது உலக மகா யுத்தம் முடிவடையும்போது பிரிட்டன 85 தாங்கிகளை நிறுவிமுடித்தது. மீதி 16 தாங்கிகளும் நிறுவப்பட்டுக் கொண்டிருந்தன. இவை இரண்டாவது உலக மகாயுத்தத்தின் பின்னர் பூர்த்தியாக்கப்பட்டன.

ஒவ்வொரு தாங்கிகளுக்கும் இலக்கங்கள் குறிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு தாங்கியும் 15ஆயிரம் தொன் எண்ணெய் கொள்ளக்கூடியவை.

உலக மகா யுத்தத்தின்போது தொண்ணூற்றோராவது(91) இலக்க தாங்கி, ஜப்பானிய விமான ஓட்டி ஒருவரால் தற்கொலைத் தாக்குதல்மூலம சிதறடிக்கப்பட்டதால் கைவிடப்பட்டது.

## மாற்றார் தோட்டத்திலிருந்து

1945இல் இடம்பெற்ற அந்தத் தாக்குதலால் அந்த எண்ணெய்த் தாங்கி தீப்பிடித்து இரண்டு தினங்களாக எரிந்தது. நான் அதனைப் பார்த்தபோது ஜப்பானிய விமானத்தின் உடைந்த துண்டங்களைக் கணடேன். மேலும் எரிந்த எண்ணெய்த் தாங்கியின் உட்புற உலோகங்கள் சாதாரண கடதாசி எரிந்து சுருண்டது போன்ற நிலையில் காணப்பட்டது. எனவே, 91 ஆவது இலக்கத் தாங்கி திருத்தப்படமுடியாதெனக் கைவிடப்பட்டது.

எனினும், எரிந்த இந்தத் தாங்கியை எதிர்காலத்தில் சுற்றுலாப் பயணிகளின் பார்வைக்குரிய பொருளாகப் பாதுகாத்துவைக்கலாம் அல்லது இந்த நிகழ்வின் சுவாரசியமான விவரங்களை எழுதி அதனருகே பார்வைக்கு வைக்கலாம்.

மேலும், ஒன்பதாம் இலக்கத் தாங்கியும் உலக மகாயுத்தத்தின்போது ஜப்பானிய குண்டுத் தாக்குதலால் சேதமாக்கப்பட்டது. இது சீனக் குடாவிலுள்ள இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வாசலில் அமைந்துள்ளது.

1958இல் மேலும் ஒரு நிகழ்வு நடைபெற்றது. அதாவது இரண்டு விமானிகள், இரு பொறியியலாளர்கள உட்பட 6பேர் பயணித்த விமானம் ஒன்று புறப்பட்ட சில வினாடிகளில் எண்ணெய்க்குதப் பகுதிக்குள் வீழ்ந்து நொறுங்கியது. இதில் அந்த ஆறு பேருமே கொல்லப்பட்டனர்.

இலங்கையும், இந்தியாவும் திருகோணமலை எண்ணெய்க்குதம் பற்றி 1987இல் அபிப்பிராயங்களைப் பரிமாறிக் கொண்டன. எண்ணெய்க் குதத்தினை இருதரப்பும் இணைந்து நிர்வகிக்கலாம என்று இந்தியா அப்போது தெரிவித்திருந்தது.

தற்போது மொத்தமாக உள்ள தாங்கிகளில் சுமார் 25 தாங்கிகளை இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் பயன்படுத்துகின்றது.

எண்ணெய்க்குதம் அபிவிருத்தி செய்யப்பட்டு அதன் முழு அளவிலான பாவனை ஆரம்பிக்கப்படும்போது இலங்கையில் எப்பொழுதும் ஐந்து வருடத்திற்குத் தேவையான பெற்றோலிய எண்ணெய்யைக் கையிருப்பில் வைத்திருக்கமுடியும். அத்துடன் எரிபொருளுக்காக ஏராளமான கப்பல்கள் திருகோணமலைத் துறைமுகத்தை நாடும் நிலை உருவாகும் அப்பகுதியில் கைத்தொழில் நிலையங்களை அமைக்க வாய்ப்புகள் அதிகரிக்கும். அவற்றுக்குத் தேவையான எண்ணெய்களை குழாய்கள்மூலம் குதத்திலிருந்து விநியோகிக்கமுடியும்.

மேலும் தங்கும் விடுதிகள், வீடமைப்புத் திட்டங்கள், கூட்டுத் தொகுதிகளிலான பல வியாபார நிறுவனங்கள் போன்றவை திருகோணமலையில் தொடங்க வாய்ப்புகளேற்படும். அதனால் பல தொழில்வாய்ப்புகள் கிட்டும்.

மேலும் உப்புவெளி, நிலாவெளி, இறக்கக்கண்டி மற்றும் குச்சவெளி ஆகிய இடங்களின் கடற்கரையோரப் பகுதிகளைச் சுற்றுலாப் பகுதிகளாக அபிவிருத்தி செய்துகொள்ளலாம்.

ஆனால், இவற்றுக்கெல்லாம் தேவைப்படுவது நாட்டில் சமாதானத் தீர்வு. 1980 மற்றும் 1990 களிலான கடந்த காலங்களில திருகோணமலைப பிரதேசம் பயங்கரமான, பிரச்சினையான வலயமாக இருந்தது. எனவே சமாதானத்திற்காக ஏம், வளம் பெறுவ தற்காகவும் பிரார்த திப்போம் - உள்நாட்டுப் போரில் வெற்றி பெற்றவர்கள் என யாருமில்லை. ★

## அடிப்படை வசதியின்றி மக்கள் அவதி

வலி.மேற்கு,ஓக.28

காரைநகர் தோப்புக்காட்டில் மீளக் குடியமர்ந்த மக்கள் அடிப்படை வசதிகளின்றி அவதிப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

காரைநகர் தோப்புக்காட்டில் 12 வருடங்களுக்குப் பின்னர் தற்போது மீளக்குடியமர்ந்துள்ள 86 குடும்பங்களைச் சேர்ந்த, சுமார் 400 பேர் மலசலகூடம் மற்றும் குடிநீர் வசதிகளின்றி இருப்பதாகக் கூறப்படுகிறது. (ஓ-1/75)

## சுன்னாகம் மத்திய பகுதியில் வீடு கட்டித்தரக் கோரிக்கை

வலி.தெற்கு,ஓக.28

கடந்தகால இராணுவ நடவடிக்கைகளால் தமது சொந்த இருப்பிடங்களை இழந்துநிற்கும் சுன்னாகம் நகர மத்திவாழ் மக்கள் அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள்மூலம் இப் பகுதியில் வீடமைப்புத்திட்டம் ஒன்றின் மூலம் தமக்கு வீடுகள் கட்டித் தருமாறு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

சுன்னாகம் நகர பத்தி ஐக்கிய அபிவிருத்தி சனசமூக நிலையத்தினூடாக, யாழ். அரச அதிபர், வலி. தெற்கு பிரதேச செயலர், வலி.தெற்கு பிரதேச சபைத் தலைவர் ஆகியோரிடம் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கடந்தகால இராணுவ நடவடிக்கைகளால் இப்பகுதி மக்களின் குடியிருப்புக்கள், சொத்துக்கள், உடைமைகள் யாவும் அழிந்து போய்விட்டன. மக்கள் இடம்பெயர்ந்து வாழ்வதால் தொழில் வாய்ப்புக்கள், பிள்ளைகளின் கல்வி, பொருளாதாரம், சுகாதாரம் என்பன பாதிப்படைந்துள்ளன.

எனவே, அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள், சுன்னாகம் நகர மத்தியில் பாதிப்படைந்துள்ள குடும்பங்களுக்கு வீடமைப்புத் திட்டமொன்றை வகுத்து வீடுகள் கட்டித்தரவேண்டுமென கேட்டுக் கொள்வதாக அவர்கள் தமது கோரிக்கையில் கேட்டுள்ளார்கள். (ஓ-152)




செலான் வங்கியின் யாழ்.கிளையில், குழந்தைகளுக்கான 'டிக்கிரி' சேமிப்புக் கணக்கிற்குரிய சைக்கிள்கள் வழங்கும் வைபவம் அண்மையில் நடைபெற்றது.

அப்போது செலான் வங்கியின் யாழ்.கிளை முகாமையாளர் கு.கனகசிங்கம் மற்றும் ஊழியர்களுடன் சைக்கிளைப் பெற்றுக்கொண்டோர் எடுத்துக்கொண்ட படம் இது.

## வீதியில் உள்ள மின் குமிழ்கள் விஷமிகளால் சேதம்

நீர்வேலி கந்தசுவாமி கோயில் பகுதியில் மின்சாரக் கம்பங்களில் பொருத்தப்பட்ட மின்குமிழ்களை சில விஷமிகள் உடைத்து சேதப்படுத்தி வருகின்றனர். அந்த விஷமிகள் தமது திருட்டு நடவடிக்கைகளுக்கு சாதகமாகவே மின்குமிழ்களைச் சேதப்படுத்துவதாகக் கூறப்படுகிறது.(ஓ-1.7)

# நல்லூர் உற்சவகால சிறப்பம்சம்

(16ஆம் திருவிழா)



## கருணை காட்டு கந்தா!

துன்பங்களில் துவண்டுபோயுள்ளோம் – கந்தனே
கருணை காட்டுவாயா?
தமிழர் நாம் தலைநிமிர்ந்து வாழ – கந்தனே
நல்ல வழி காட்டுவாயா?
சொல்லியழ யாருண்டு உன்னையன்றி – கந்தனே
துயரெல்லாம் நீக்குவாயா?
முருகா உன் மலரடிக்கு – தினந்தோறும்
ஓடோடி வருகின்றோம்
கடைக்கண்ணால் பார்க்க வேண்டும் – எம்
கஷ்டமெல்லாம் போக்க வேண்டும்.

- சுண்டிக்குளி றீற்றா.

## தொல்லை வினைகள் தீர்ப்பாய்

தேவர் துயர் துடைத்தவா - வள்ளி
தெய்வயானையை மணந்தவா
தந்தைக்கு உபதேசம் செய்தவா
தமிழ் அன்னைக்கு சுட்டபழம் தந்தவா
தில்லைக் கூத்தனின் மைந்தனே
நல்லையம் பதியமைந்த கந்தனே
எல்லையில்லா அருள் சுரந்துமே - எமது
தொல்லை வினைகளைத் தீருமே.

- நயினையான்

## விடிவினைத் தந்தருள்வாய்!

கரையோடு அலைமோதி இசையோடு கவிதந்து
களிகொண்ட தேசமிது – தமிழ்
கவிகண்ட இன்பமது – இன்று
தரையோடு உடல்சாய தமிழன்தன் உயிர்மாய
தறிகெட்ட காலமாச்சே – தரணியில்
தமிழ்கெட்ட கோலமாச்சே – நல்லூர்
விரைந்தோடி வந்துந்தன் கழல்மீது நாம் வீழ்ந்தோம்
வடிவேலனே காத்தருள்வாய் – நிரந்தர
விடிவினை நீ தந்தருள்வாய்!

- நீர்வையூர் வி.பராபரன்.

## நல்லூரில் வீற்றிருக்கும் பெருமானே!

நல்லூர் முருகா கழலடி பணிந்தோம்
மயிலேறி வந்தருள்வாய் கந்தா
சங்கரன் மகனே மாயவன் மருகா
சக்தி மைந்தா காப்பாய் சரணம்.

- கி.கஸ்தனி.

## கண்திறந்து பார்க்கவேண்டும்!

வள்ளி தெய்வானையோடு வண்ணமயில் மேலேறி
சேவற் கொடியுடனே வேலாட்சி புரிபவனே
பார்வதி மைந்தனே எம் நல்லூர்க் கந்தனே
காசினியில் மாசினை நீக்கிடவே
வரம் அருள்வாய் வேலவனே

- சி.திருச்செந்தூரன்.

## தேறுதல் அளிப்பாய்!

கோல மயில்மீதில் காட்சிதருவாய் – நல்லை
வேலா வடிவேலா அருள்பாலா என்றும்
ஞாலம் புகழ்கின்ற ஞானத் திருமுருகா
ஆலம் உண்ட அரன் சீலத் திருக்குமரா
ஆறுமுகனாய் அன்று சரவணப் பொய்கையில்
அவதரித்தே தேவர் துயர் துடைத்தாய்
கூறுமடியார் புகழ் குன்றுதோறும் கேட்டு
தேறுதலைத் தர நல்லையில் உறைந்தாய்
நாடினோம் உனை அருள்தாராய்.

– எஸ்.சிவானந்தராஜா

## கராத்தே பயிலும் மாணவர்களுக்கு இதோ ஓர் அரியசந்தர்ப்பம்!

தீவகத்தில் புதிய இடங்களில் புதிய நேரங்களில்
கராத்தே வகுப்புக்கள் மிகவிரைவில் ஆரம்பமாகவுள்ளன.
பாடசாலை மாணவர்களுக்கு விசேட சலுகைகள் உண்டு.

தொடர்புகளுக்கு:
**ஐலன்ட் சோட்டோகான் கராத்தே டு அசோசியேசன்**
கரம்பொன் கிழக்கு, கரம்பொன்.

*தகவல்:*
SENSEI கு.ஜெகனேந்திரன்.

(7612)



UNIVERSITY OF JAFFNA

**FACULTY OF GRADUATE STUDIES**
**FIRST SEMESTER EXAMINATION**
**POST-GRADUATE DIPLOMA IN PUBLIC ADMINISTRATION**

The above examination will commence on 2nd September, 2002. Candidates could collect the application form and admission cards at the Office of the Dean, Faculty of Graduate Studies.

**REGISTRAR,**
*University of Jaffna.*
*2002.08.24*

(C/23315)



## புதிய அவன்ந்தி




லைசன்ஸோ அல்லது இலக்கமிடப்பட்ட
தகடோ அவசியமில்லை.
நான்கு வர்ணங்களில் கிடைக்கும்

விலை ரூ. 36,000/-
(எல்லா வரிகளும் அடங்கும்)

இலகு தவணை முறையில்
பெற்றுக் கொள்ளவாம்

ஏக விநியோகஸ்த்தர்
**ஸ்டிரைட் சர்விசஸ் (பிரைவட்) லிமிட்டட்**
9/3-6, ராஜகீய மாவத்தை, கொழும்பு 7.
தொலைபேசி: 676493, 683870 பக்ஸ்: 693490 E-mail : stride@dpmce.com

*வர்த்தக விசாரணைகள் வரவேற்கப்படுகின்றன*

**விற்பனை மற்றும் சேவை முகவர் வலையமைப்பு**

ருஜித் என்டர்பிரைசர்ஸ், அம்பலங்கொடை, தொ.பே. 09-58354, சந்திம டிரேட் சென்டர், எம்பிலிபிட்டி, தொ.பே. 047-30235, துஷார அக்ரிகல்சரல் சேர்விஸ், பொலன்னறுவை, தொ.பே. 027-23766, மஹாநாம மோடர்ஸ், காலி. தொ.பே. 09-22918 சீதேவி மோடர்ஸ், அனுராதபுரம். தொ. பே. 025-24746, மஹேஸ் என்டர்பிரைஸஸ், மாத்தறை. தொ. பே. 041-24216 ஜிந்தா டிரக்டர்ஸ், தம்புத்தெகம - தொ. பே. 037-88583, மீரிகம - தொ. பே. 037-88585 நேசனல் ஏஜென்சி, அகுரஸ்ச, தொ. பே. 041-84410

(C/23315)


## நிரந்தர நியமனம் வழங்கப்பட்டது

குருநகர்,ஓக.28

நிவாரண ஊழியர்களாக பாடசாலைகளில் சேவை புரியும் ஆறு நிவாரணப் பணியாளர்களுக்கு வடக்குக் கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு நிரந்தர நியமனக் கடிதங்களை அனுப்பிவைத்துள்ளது.

இராசா உகந்தராசா (யாழ்.மத்திய கல்லூரி), மகாலிங்கம் மகாராஜ்(யாழ்.இந்துக் கல்லூரி), தவராசா ராஜீவன்(யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி), செல்வி சசிகலா விஜயரத்தினம் (சுழிபுரம் விக்ரோறியா கல்லூரி) ஆகிய பாடசாலைப் பணியாளர்களுக்கும்,

செல்வராசா மரியதாஸ்(வேம்படி மகளிர் கல்லூரி), கந்தசாமி மகேந்திரன்(யாழ்.மத்திய கல்லூரி) ஆகிய சுகாதாரப் பணியாளர்களுக்குமே வடக்கு கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு 01.10.2001இல் இருந்து செயற்படும்படியாக நிரந்தர நியமனக் கடிதங்களை அனுப்பி வைத்துள்ளது.

(ஒ-51)

## 'ஞானச்சுடர்' வெளியீட்டு விழா

சண்டிலிப்பாய்,ஓக.27

தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ, கலை பண்பாட்டுப் பேரவை மாதம் தோறும் வெளியிட்டு வரும் "ஞானச்சுடர்" மலரின் ஆவணி மாத இதழின் வெளியீட்டு விழா எதிர்வரும் 30ஆம் திகதி வெள்ளிக் கிழமை முற்பகல் 10.30 மணிக்கு ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இதன் வெளியீட்டுரையை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி ஆசிரியர் து.கணேசமூர்த்தி நிகழ்த்துவார். மதிப்புரையை ஆசிரியர் இரா.செல்வவடிவேல் நிகழ்த்துவார்.

(ம-135)

## மண்டேலா வரவேற்பு

கொழும்பு,ஓக.28

இலங்கையில் நடந்துவரும் சமாதான முயற்சிகளை தென்னாபிரிக்க முன்னாள் அதிபர் நெல்சன் மண்டேலா வரவேற்றுள்ளார்.

'நெல்சன் மண்டேலா' எனும் பெயரில் உருவாக்கப்பட்டுள்ள நாடகத்தின் அரங்கேற்றவிழா கொழும்பில் நடந்தபோது அதில் கலந்துகொண்டு உரையாற்றிய நெல்சன் மண்டேலா இலங்கையல் சமாதானம் மலருவதைத தான் எதிர்பார்த்திருப்பதாகவும் தெரிவித்தார்.

(ஒ-12)


### தேவை

எமது ஸ்தாபனத்திற்கு வேலையாள்கள் தேவை. நேரில் வரவும்.
தொடர்பு:
**அபீஸ் கோப்பி சென்ரர்**
*115,ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.*



சுவிட்ஸர்லாந்தின் உற்பத்தி நிறுவனத்தின் தரத்திற்கு நிகராக 1975 ஆம் ஆண்டு இந்தியாவில் ஆரம்பிக்கப்பட்ட பிரபல்யமான *VERMASONS* உற்பத்தி நிறுவனமாகும்.

**Simpex® PHOTO & VIDEO**

**PROLITE®** PROFESSIONAL STUDIO FLASH SYSTEM

*TECHNOLOGY IN SWITZERLAND, MADE IN INDIA*


**இந்த இரண்டு தயாரிப்புகளுக்குமான ஒரே இலங்கை நிறுவனம்**

**Sense Photo**
(பத்திக் சென்றர் நிறுவனத்தோடு)

நீங்கள் விலைகொடுக்கும் எல்லா PROLITE 300 D ஒவ்வொன்றும் சாம்பல் நிற முலாமில் பூர்த்தி செய்யப்பட்டது. Special made for Sense Photo Sri Lanka என்னும் எங்கள் இலட்சினை பொறிக்கப்பட்டுள்ளதா என்பதை நன்கு பரீட்சிக்கவும். சாதாரண விலையில் நீங்கள் பெற்றுக்கொள்ளும் எல்லா STUDIO FLASH SYSTEM ஒவ்வொன்றுக்கும் உத்தரவாதம் உறுதி.
(நீங்கள் பெற்றுக்கொள்ளும் எல்லா PROLITE 300 D தொகுதிக்கும் White குடை இரண்டுக்கு மேலதிகமாக Black & Silver குடை ஒன்றை இலவசமாக பெற்றுக்கொள்ளவும்.)

- Nikon / Vivivtar / Braun கேமராக்கள்
- Prolite Ak; Simpex Video Light
- Simpex Trigger Ak; Flash Meter
- திரை நிறுத்தி (stand) யும் வர்ண திரையும்
- எல்லா கேமரா பற்றரிகள்.
- Tripod டும் எல்லா வடிவங்கள் (Filters)
- கேமரா பேக்கும் எல்லாவித FLASH உம்
- MINI SPOT LIGHT டும் SNOOT

ஆகியனவும் எல்லாவித கேமரா உபகரணங்களும்.



**விற்பனையின் பின்பும் எமது சேவைகள் தொடரும்**

மொத்த கொள்வனவுகளுக்கு விஷேட சலுகை.

(போலிகளைக் கண்டு ஏமாறாதீர்கள்.)

**பத்திக் சென்றர் Batik Center**

இல.P29, மல்லவத்த வீதி, கொழும்பு - 11.
தொலைபேசி: 01- 447313. (7604)

**P.29, Front Street, Colombo - 11, Sri Lanka.**
**Tel/Fax: 0094 - 1- 447313**


## கண்ணீர் அஞ்சலி

கெயர் சர்வதேச, யாழ்.பிராந்தியப் பிரதிநிதி
நிக்கலீன் சாமிநாதர் அவர்களின் அருமைத் தாயார்
**திருமதி அந்தோனியா சாமிநாதர்**

அவர்களின் மறைவையொட்டி துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*யாழ்ப்பாணம்.* (7608)

உத்தியோகத்தர்கள்,
*கெயர் - சர்வதேசம்.*

## கண்ணீர் அஞ்சலி

எமது சக மாணவி
**செல்வி தர்சிகா கந்தவனம்**

அவர்களின் (24.08.2002) மறைவையிட்டு நாம் ஆழ்ந்த கவலையடைகின்றோம். அவரது பிரிவினால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, கண்ணீர் அஞ்சலியைக காணிக்கையாக்கி, அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

*கொக்குவில்.* (சி-23312)

7B வகுப்பு மாணவர்கள்,
கொக்குவில் இந்துக் கல்லூரி.

## 4ஆம் வருட நினைவலைகள்

பிறப்பு
11 - 11 - 1939



இறப்பு
28 - 08 - 1998

### அமரர் பொன்னையா தியாகராசா

எம் இதயத்தில் நிறைந்திருக்கும்
எங்கள் இனிய அப்பாவே!
பாசமுள்ள அம்மாவின்
இதயத்தின் ஒளிவிளக்கே!
இவ்வுலகை நீங்கள் விட்டேகி
நான்கு ஆண்டுகள் ஆனாலும்
மாறிடுமோ எம் துயரம்
மறைந்திடுமோ உங்கள் முகம்?

கண்ணின் கருமணிபோல்
எமை வளர்த்த தெய்வமே!
நீங்கள் சிரித்திட்ட நேரம் கூட
எம்மை இப்போ சிந்திக்க வைக்குதப்பா!

அருகிருந்து வழிகாட்டிய
எம் அன்புத் தெய்வமே!
இன்று உங்கள் அன்பும் அரவணைப்பும்
எங்குதான் போனதப்பா?
பாரதில் பண்பால்
பலரையும் கவர்ந்தவரே!
பாசத்தின் சுமையோடு
எமைப்பிரிந்து சென்றவரே!

எம் குடும்பத்தின் விழிகளெல்லாம்
நீர்தேங்கி நிற்குதப்பா!
வழிந்தோடும் விழிநீரில்
எங்கள் விழிதேடும் உங்கள் முகம்
விழிதேடும் இடமெல்லாம்
விம்பம் போல் தோன்றுதப்பா!

அப்பா! நெச்சிருக்கும் வரை
என்றும் உங்கள் நினைவிருக்கும்!
அந்த இனிய நினைவதில்
உங்கள் அன்புமுகம்
என்றும் நிலைத்திருக்கும்!
உங்கள் நினைவு கூட
என்றும் எம் வாழ்வில்
சுகமானவையே!

பிரிவால் துயருறும்:
**- குடும்பத்தினர்.**

*நிரந்தர முகவரி*
*'தியாக வதிகை'*
*ஆயத்தடி, மிருசுவில்* (7603)

*தற்காலிக முகவரி:*
*192, கச்சேரி நல்லூர் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

யாழ்.புன்னாலைக்கட்டுவன் வடக்கு
அருள்மிகு ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
(நாச்சிமார்கோவில்)

## கட்டுக்குளை கந்தசுவாமி கோவில்

மேற்படி ஆலயங்களின் வளர்ச்சிக்காக
புதிய திருப்பணிச்சபை ஒன்றைத் தெரிவுசெய்தல்

*இடம்:* ஆலய மண்டபம்
*நாள்:* நாளை (29.08.2002) வியாழக்கிழமை
*நேரம்:* பிற்பகல் 2மணி (பழைய நேரம்)
*தலைமை:* ஆலய தர்மகர்த்தாவும் ஆதீன குருவும்
க.ந.சபாரத்தினக் குருக்கள்

நாளை மதியம் விசேட பூசையும் அன்னதானமும் வழங்கப்படும். இந்நிகழ்விற்கு புன்னாலைக்கட்டுவன் வடக்கு வாழ் மக்கள் அனைவரையும் வருகைதந்து ஒத்துழைப்பு நல்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

இவ்வண்ணம்,
(C-23314) ஆலய தர்மகர்த்தாவும், ஊர்மக்களும்.

## யாழ்.பல்கலைக்கழக நுண்கலைத்துறை சுற்றுலா சம்பந்தமான கலந்துரையாடல்

முதலாம், இரண்டாம் வருட அனைத்து இசைத்துறை மாணவர்களையும் 30.08.2002 வெள்ளிக்கிழமை காலை 10.00மணிக்கு இராமநாதன் நுண்கலைத்துறை இசைத்துறை வளாகத்தில் மேற்படி கலந்துரையாடலுக்காக ஒன்றுகூடுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இரண்டாம் வருட மாணவர்கள்,
யாழ்.பல்கலைக்கழகம். இசைத்துறை. (7617)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் பழைய மாணவியும்,
நீண்டகாலம் சேவையாற்றியவரும், பாடசாலையின்
ஆரம்ப பிரிவுப் பகுதித் தலைவராகக் கடமையாற்றியவருமான

### திருமதி அந்தோனியா சாமிநாதர்

அவர்கள் காலமாகியதையிட்டு நாம் மிகவும் கவலையடைகின்றோம். அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆன்மசாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், ஊழியர்கள்,
(7609) யாழ்.திருக்குடும்ப கன்னியர்மடம்.

## நல்லைக் கந்தன் ஆலயச் சூழலில் இன்று நடப்பவை

யாழ்ப்பாணம்,ஓக.28

நல்லூர் ஆலய உற்சவத்தை ஒட்டி ஆலயச் சூழலில் இன்று புதன்கிழமை நடைபெறும் நிகழ்வுகளின் விவரம் வருமாறு:-

★அகில இலங்கை கம்பன் கழகத்தால் கம்பன்கோட்டத்தில் இன்று 6 மணிக்கு நடத்தப்படும் தெய்வீகச் சொற்பொழிவில் 'அருணகிரியார் கண்ட முருகன்'' என்ற தலைப்பில் கு.பால ஷண்முகனின் உரை.

★துர்க்கா மணிமண்டபத்தில் இளங்கலைஞர் மன்றம் நடத்தும் இசை ஆராதனை நிகழ்வில் மாலை 6 மணிக்கு வி.கே.பஞ்சமூர்த்தியின் "கெஞ்சிற் கச்சேரி".வயலின் - ஆர். இராதாகிருஷ்ணன், தவில் - ஆர். ஆனந்த கணேஸ், மிருதங்கம் - ஏஸ்.துரைராசா, முகர்சிங் - எம். கஜன், கெஞ்சிரா - கே.அனந்தகோபன்.

★நல்லை திருஞானசம்பந்தர் ஆதனத்தில் அதிகாலை திருமுறை வீதிப் பஜனையும், குருமூர்த்தி ஆலயத்தில் விசேட வழிபாடுகளும் இடம்பெற்று காலை 9மணிக்கு சமயதீட்சை வழங்கப்படும். தொடர்ந்து புராணபடனம்.

★வடபிராந்திய இந்துசமய பேரவையின் ஏற்பாட்டில் அறுபத்து மூன்று நாயன்மார் குருபூசை மடத்தில் இடம்பெறும் தெய்வீக இசைச் சொற்பொழிவில்"சிதம்பர தரிசனம்'' என்ற தலைப்பில் ஏழாலை சைவப் பெரியார் எஸ்.சண்முகவடிவேலின் உரை.

★நல்லூர் சைவமகாசபையினரால் நல்லூர் மேற்கு வீதியில் அமைந்துள்ள முத்துவிநாயகர் ஆலயமண்டபத்தில் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ள தெயவீகத்தொடர் இசைப்பேருரையில் மாலை 5.45 மணிக்கு 'அரக்கு மாளிகை' என்ற தலைப்பில் கான கதா வாரிதி பிரம்மஸ்ரீ சிவ வைத்தியானந்த சர்மாவின் கதாப்பிரசங்கம்.

(ம-ரி)

## துயர் பகிர்தல்

எமது பிரதேச செயலக கிராம அலுவலர் (ஜே/209)
திரு.கோ.விக்கிரமசிங்கம் அவர்களின் பாசமிகு தந்தையார்

### சின்னத்தம்பி கோபாலபிள்ளை

அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*நலன்புரிச்சங்கம்,* பிரதேச செயலரும்,
*பிரதேச செயலகம், வலி.தெற்கு, உடுவில்.* அனைத்து அலுவலர்களும். (7611)

# மரண அறிவித்தல்கள்

## கணபதிப்பிள்ளை சுப்பிரமணியம்

(ஓய்வுபெற்ற மேற்பார்வையாளர், நீர்ப்பாசன, பெருந்தெருக்கள் திணைக்களம்)

வரியப்புலம், சுன்னாகத்தைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை சுப்பிரமணியம் அவர்கள் 25.08.2002 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 26.08.2002 திங்கட்கிழமை நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி.சு.அனேஸ்வரி (மனைவி),
*வரியப்புலம், சுன்னாகம்.* (7616) சு.கிரிதரன் (மகன்).

## தெய்வர் கந்தையா செல்வராசா

(ஓய்வுபெற்ற பிரதி அதிபர்,யா/ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாசாலை)

ஏழாலை வடக்கைப் பிறப்பிடமாகவும், ஏழாலை மேற்கு நாக்கியம் புலத்தை - வதிவிடமாகவும் கொண்ட ஆசிரியர் தெ.க.செல்வராசா அவர்கள் 25.08.2002 ஞாயிற்றுக்கிழமை இறையடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தெய்வர் கந்தையா-பசுபதிப்பிள்ளை தம்பதியினரின் ஏகபுத்திரனும், காலஞ்சென்ற சின்னையா-முத்துப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகனும், யா/ஏழாலை சைவமகாஜன வித்தியாசாலை ஓய்வுபெற்ற ஆசிரியை இராஜேஸ்வரியின் பிரிய கணவரும், கஜனி (ஜேர்மனி), பிரகதீஸ்வரன்(ஜேர்மனி), சிவருபன்(பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பிள்ளை, சித்திரம், பூமணி, கௌரிதேவி ஆகியோரின் அருமைச் சகோதரரும், காலஞ்சென்ற ஓய்வூதியர் சிவலிங்கம், கந்தசாமி, பரமானந்தம், இ.சிவராசா, காலஞ்சென்ற சி.ஸ்ரீவராசா(புகைவண்டிச் சாரதி), மகேஸ்வரி, இராசலட்சுமி(சுந்தில்) ஆகியோரின் அன்புமிகு மைத்துனரும், ஜோதினி, சர்மிலா, சிறீதரன் ஆகியோரின் ஆருயிர் மாமனாரும், பிரசாளினி, பிரவீனா, சிவதரன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.08.2002) வியாழக்கிழமை காலை 10 மணிக்கு அவரது ஏழாலை மேற்கு இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஏழாலை மேற்கிலுள்ள ஆலங்கட்டை மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
*நாக்கியபுலம்,* திருமதி செ.இராஜேஸ்வரி
*ஏழாலை மேற்கு, சுன்னாகம்.* (7620) (மனைவி)

## தாமர் சின்னத்தம்பி

பலாலி தெற்கு, வசாவிளானைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட தாமர் சின்னத்தம்பி அவர்கள் (24.08.2002) சனிக்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தாமர் - சோதி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான மயிலு - கனகம்மாவின் மருமகனும், பாக்கியத்தின் (London) அன்புக் கணவரும்,லட்சுமி,காலஞ்சென்றவர்களான சவரிமுத்து, மாணிக்கம், சின்னப்பிள்ளை, வள்ளிப்பிள்ளை, கணமணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் சின்னக்கிளி, சிவகுருநாதன், மகாதேவன், தங்கம்மா, இந்திராதேவி ஆகியோரின் மைத்துனரும் லீலா (Denmark), அருந்தவம்(France), செல்வம்(Norway), சந்திரன் (France), வவா(France), குலம்(France),மோகன்(Canada), ஜெயா (London), கிரி(London) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிவசோதி (Denmark), ஸ்ரீரா(France), வசந்தி(Norway), ஜசிந்தா(France), கெசிலா (France), ஜெனிதா(Canada), தர்ஜினி(London), ரஞ்சனா(London) ஆகியோரின் அன்பு மாமனாரும், பாபு, டெனிசன், கௌரி, கீதா,சர்மிளா, அனி, ஜெனி, அன்றூ, லொஜிற்றா, கெவின், டனி, றெஸ்மன், ஸ்டிபானி, சோபி, கீர்த்தி ஆகியோரின் பாசமிகு பேரனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 31.08.2002 சனிக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு (London time) லண்டனில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*533/01,ஸ்ரான்லி றோட்,*
*யாழ்ப்பாணம்.* தகவல்:
தொடர்பு:-2084226432 (7619) S.தெய்வேந்திரம்.


RAMCO CEMENT
ராம்கோ சிமெந்து

இந்தியாவிலிருந்து நேரடியாக இறக்குமதிசெய்யப்பட்ட
ராம்கோ RAMCO சிமெந்து (கோபுர மார்க்)
விற்பனைக்கு வந்துவிட்டது!

☆தேவையான நிறுவனங்கள் உடன் தொடர்புகொள்ளவும். முன்கூட்டியே பதிவு செய்பவர்களுக்கு இலவசமாக லொறிமூலம் விநியோகம் செய்யப்படும்.

ராம்கோ சிமெந்து ஏக இறக்குமதி நிறுவனம்:
ஈஸ்வரபகவான் & கொம்பனி
91, ஸ்ரான்லி வீதி, (7618) யாழ்ப்பாணம். T.P:021 - 2350



வியாபார உலகை வெற்றி கொள்ளுங்கள்

இன்றைய உலகில் வியாபாரத்துறையில் மிக உயர்ந்த ஸ்தானத்தை அடைய, கைத்தொழிலுக்கு தேவைப்படும் சர்வதேசரீதியில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் பட்டமொன்று உங்களுக்கு அவசியமாகும்.

* அவுஸ்திரேலியாவில் உள்ள ஆறு மிக உயர்ந்த பல்கலைக்கழகங்கள் வர்த்தகம், முகாமைத்துவம், வியாபாரம், நிதி, பொருளியல், மற்றும் சர்வதேச உறவுகள் என பலதரப்பட்ட துறைகளில் பாடநெறிகளை வழங்குகின்றன.

* அவுஸ்திரேலியாவில் உள்ள முன்னணி வியாபாரத் தாபனங்களில் கற்கும் போதே அனுபவத்தைப் பெறும் வகையில் இப்பாடநெறிகள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

* அபிவிருத்தியடைந்த ஒரு நாட்டில் சீவியத்தொழில் அறிவு, தேர்ச்சிகள், மற்றும் வேலை அனுபவம் ஆகியவற்றை உங்களால் ஈட்ட முடியும்.

2003 பெப்ரவரிக்கான மாணவர்களின் தெரிவுவரை அவுஸ்திரேலியாவுக்கான மாணவ விசாக்கள் வழங்கல் தளர்த்தப்பட்டுள்ளது.



பின்வரும் பல்கலைக்கழகங்களில் பாடநெறிகள் நடத்தப்படுகின்றன:
* கன்பரா, அவுஸ்திரேலியா தேசிய பல்கலைக்கழகம்
* சிட்னி பல்கலைக்கழகம்
* மெல்பர்ன் பல்கலைக்கழகம்
* அடிலெயிட் பல்கலைக்கழகம்
* தென் அவுஸ்திரேலியா பல்கலைக்கழகம்
* [illegible] பல்கலைக்கழகம்

மேலதிக விபரங்களுக்குத் தொடர்பு கொள்ளுங்கள்:-
திருமதி கோகிலாதேவி மகேந்திரராஜா
சுகந்தம் வன்னியசிங்கம்வீதி
இணுவில் தெற்கு சுன்னாகம் 070 - 212641
கிழமை நாள்கள் - மாலை 5.00 - 9.00
வார இறுதி நாள்கள் - காலை 8.00 - மாலை 8.00

edlocate
EDUCATION AUSTRALIA
எட்லொக்கேற் (பிறைவேற்) லிமிற்றெற்
23/1, றொஸ்மீட் பிளேஸ், கொழும்பு 07
தொலைபேசி: 670748, 074 - 618718 பக்ஸ்: 074 - 790957
ஈமெயில்: marketinge@edlocate.lk
வெப்சைட்: www.edlocate.lk

Impact House of Advertising



நிறைஞ்சனாஸ் சங்கானை
அஜித், மீரியாசில் நடித்த
றெட் (ரீலீஸ்)
காட்சிகள்: 11.00, 2.30, 5.30 (புதியநேரம்) (C-23321)

ராஜா யாழ்ப்பாணம்.
இந்தியாவிலும் இலங்கையிலும்
ஒரே தின வெளியீடு
ரஜனிகாந், மனீஷா, கவுண்டமணி நடித்த
பாபா
பல வருடங்களுக்குப் பின்னர்
எல்லாக் காட்சிகளும் கொப்டப்படுவதால் காண்பிக்கப்படுகின்றன

நாகம்ஸ் சுன்னாகம்
விஜய், ஜோதிகா நடித்த
குஷி (ரீலீஸ்)
தினசரி : 11.00, 3.00
குறிப்பிட்ட சில தினங்கள் மட்டும். (7606)

லஷ்சுமி இணுவில்
அர்ஜுன், சாக்ஷி, செந்தில், வினீத், திவ்யா, கவுண்டமணி நடித்த
வேதம் (ரீலீஸ்)
தினசரி: 10.30, 2.30, 6.30 (ப.நே.)

# வெள்ளியன்று நல்லூரில் 6 திசைகளில் இசை அர்ச்சனை!

நல்லைக்கந்தன் ஆலயத்தில் நாளைமறுதினம் இடம்பெறவுள்ள கார்த்திகைத் திருவிழாவன்று இரவு உள்வீதியில் ஆறுதிசைகளில் இசைக்கலைஞர்கள் பங்குபற்றும் இசை அர்ச்சனை நிகழவு இடம்பெறவுள்ளது.

குடாநாட்டின் பல பகுதிகளில் இருந்து பிரபல கலைஞர்கள் இந்த நிகழ்வில் பங்கேற்கவிருக்கின்றனர்.

பல்வேறு வாத்தியங்களின் இசை நிகழ்வுகள் இடம்பெறும்.

இந்த நிகழ்வில் பங்குபற்றவிருக்கும் கலைஞர்களுக்கான ஒத்திகை இன்று மாலை 6மணிக்கு நல்லை ஆதீனத்தில் இடம்பெறவிருக்கிறது என்றும் - சகல கலைஞர்களையும் இதில் பங்குபற்றும்படி கேட்கப்பட்டுள்ளது.

## சிமெந்து வந்தது

இந்தியாவில் இருந்து 58 ஆயிரம் மைக்கறி சிமெந்துடன் 'இந்துரு வலி' கப்பல் பருத்தித்துறை துறைமுகத்துக்கு வந்துள்ளது. இதில் இருந்து சிமெந்தை இறக்கும் பணிகள் நடைபெற்று வருவதாக யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

## அரசமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த அரசமைப்புத் திருத்த நகலைப் பரிசீலனை செய்வதற்காக எதிரணியான பொ.ஐ. முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர் குழு ஒன்றை நியமித்திருப்பதாக எதிக்கட்சித்தலைவர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார் என்று இலங்கை வானொலி அறிவித்தது.

அமைச்சரவைக் கூட்ட நிகழ்ச்சி நிரலில் சேர்த்துக்கொள்ளப்படாமலேயே இந்த அரசமைப்புத் திருத்தவிடயம், அமைச்சரவைக் கூட்டத்தில் ஆராயப்படுவதாக ஜனாதிபதி செயலகம் குற்றஞ்சாட்டியுள்ளது. (ம)

## நள்ளிரவு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அழைத்துச் சென்று விசாரணை செய்த பின்னர் விடுவித்ததாகவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

சதீஸ்குமார் கண்ணன் (வயது 34), பொன்னுத்துரை அன்ரனீஸ்தாஸன் (வயது 28), முத்துராசா அன்ரன் (வயது 24), அலக்ஸாண்டர் றொகான் (வயது 18) சைமன், பட்டையா ஆகியோரே கைது செய்யப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டவர்களாவர். மேலதிக விசாரணைக்காக இன்று காலை 10 மணிக்கு பொலீஸ் நிலையத்துக்கு வருமாறு இவர்கள் பணிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டது.

இந்தச் சம்பவம் குறித்து விடுதலைப் புலிகளின் யாழ்.கோட்ட அலுவலகத்தில் சம்பந்தப்பட்ட மக்களால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.(ம-3)

## பேச்சு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லாக்கப்படும் என்று கூறப்படுவது பச்சைப் பொய். தடையைத் தற்காலிகமாக நீக்கிவிட்டு மீண்டும் பிறப்பிக்கப்படும் என்று கூறுவது கேலிக்குரியதாகும்.

அரசு சமாதானப் பேச்சுக்குச் செல்வதை எதிர்க்கட்சி எதிர்க்கவில்லை. அதற்கு எதிர்க்கட்சியின் முழு ஒத்துழைப்பும் உண்டு. ஆயினும், அரசிற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே நடைபெறும் பேச்சுக்களை அறிந்து கொள்ள மக்களுக்கு உரிமை உண்டு என்பதை அரசு உணர்ந்து கொள்ள வேண்டும். - இவ்வாறு அவர் மேலும் கூறியிருக்கிறார். (ம)

## தாய்லாந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பமாகும் என்பதைக் கூறமுடியாதிருப்பதாகவும் சமாதானப்பேச்சுக்கள் ஆரம்பமாகி அதில் சாத்தியமான பெறுபேறுகள் இருக்குமேயானால் அதன்பின் தடைநீக்கப்படுவதைத் தாங்கள் எதிர்க்கவில்லை எனவும் அவர்கள் கூறினர்.

மாதுளுவாவே சோபித, பெல்லன்வில விமலரத்ன, முறுத்தெட்டுவே ஆனந்த ஆகிய தேரர்களும் ஸ்ரீபொன்னம்பலவாணேஸ்வரர் கோயிலின் சிவஸ்ரீ குஞ்சிதபாத குருக்கள், பிரம்மஸ்ரீ குணானந்த சர்மா, ஆயர் துலிப் டி.சிகேரா ஆகியோர் இம்மாநாட்டில் கலந்துகொண்டனர். (ம)

## பயங்கரவாத...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடைமுறையில் இருந்தாலும் அவற்றிற்கு இன்றும் நாடாளுமன்ற அங்கீகாரம் கிடைக்கவில்லை.

இந்த நிலையிலும் வடபகுதி இராணுவத் தலைமை, சட்டப்பிரமாணங்களைத் தீவிரமாக நடைமுறைப்படுத்த தொடங்கியுள்ளது. பலாலி இராணுவ முகாமிற்கு கிழக்கேயுள்ள கிராமங்களைச் சேர்ந்த மீனவர்கள் மயிலிட்டி தனை இராணுவமுகாம் அமைந்துள்ள இடத்திலிருந்தே கடலுக்குச் செல்ல வேண்டும் என்றும் - தொழில் முடிந்து வரும் போது படகுகளை இராணுவ முகாம் பகுதியில் முகாமின் மேற்பார்வையில் விட்டுவிட்டு வீடு செல்ல வேண்டும் என்றும் - இராணுவத் தலைமை உத்தரவிட்டது. இதை ஆட்சேபித்து எதிர்ப்பு நடவடிக்கையாகப் பெரும் எண்ணிக்கையான மீனவர்கள் கடலுக்குச் செல்லாமல் இருக்கின்றனர்.

காட்டுப்புலம், கெருடாவில், தொண்டமனாறு முதலான கிராமங்களைச் சேர்ந்த மீனவர்களுக்கும் புதிதாகக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன என்று வடமராட்சி வடக்கு மீன்பிடிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாஜம் கண்காணிப்புக் குழுவுக்கு முறைப்பாடு செய்திருக்கிறது.

தாய்லாந்தில் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பமாக இருக்கும் வேளையில் புரிந்துணர்வு உடன்படிக்கையை மீறி பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்திற்குப் புத்துயிர் அளித்து, மீனவர்களைப் பழிவாங்கும் செயல்களா? வடக்கு மக்களிடையே கொதிப்பு எந்த நேரத்திலும் அது எரிமலையாக வெடிக்கலாம் என்று அஞ்சப்படுகிறது. (ம)

## 3 ஆவது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிய பணிப்பின்பேரில் யாழ். நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா இவரை தலா 25 ஆயிரம் ரூபா இரு ஆள் பிணையில் செல்ல அனுமதித்தார்.

இந்த வழக்கின் மற்றைய இரு எதிரிகளான ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என்.மதனராஜன் மற்றும் வேலணை பிரதேச சபைத் தலைவர் என்.கருணாகரமூர்த்தி ஆகியோர் ஏற்கனவே பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர் என்பது தெரிந்ததே.

அதேவேளை -

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்ட சமயம் சாட்சிகள் ஆஜராகாததால் எதிர்வரும் 24ஆம் திகதிக்கு அது ஒத்திவைக்கப்பட்டது.

சாட்சிகளில் ஒருவரான யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா நேற்றுச் சாட்சியம் அளிப்பதற்கான அனுமதியை நீதிமன்றத்திடம் முன்னர் பெற்றிருந்தார். எனினும், அவர் லண்டன் சென்றுள்ளதால் நீதிமன்றில் ஆஜராக முடியாதுள்ளதாக அவர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி வி.ரி.விஸ்வலிங்கம் நீதிவானிடம் தெரிவித்தார்.

இதையடுத்து நீதிவான் வழக்கை ஒத்திவைத்தார்.

நாரந்தனை தாக்குதல் சம்பவத்தில் கூட்டமைப்பு ஆதரவாளர்கள் இருவர் பலியானதும், நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்படப் பலர் காயமடைந்தனர் என்பதும் தெரிந்ததே. (ம-3-10)

## விளக்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

11வயதுச் சிறுமியை பிரஸ்தாப நபர் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்த முயன்றதாக பொலீஸில் செய்யப்பட்ட முறைப்பாட்டை அடுத்து அவர் கைது செய்யப்பட்டிருந்தார்.

மட்டக்களப்பு நீதிமன்றத்தில் அவர் நேற்று ஆஜர் செய்யப்பட்ட சமயம் அவரை விளக்கமறியலில் வைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார். (ம-3)

## வடக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிபர்களிடம் அவர்கள் கேட்டறிந்து கொண்டனர்.

யாழ்மாவட்டத்தில் மிக மோசமாகச் சேதமடைந்துள்ள பாடசாலைகளைப் புனரமைப்பதற்கு கூடிய முன்னுரிமை வழங்கப்படவுள்ளது என்று திருச்செல்வம் தெரிவித்தார்.

"சேதமடைந்த பாடசாலைகளின் விவரங்கள் முழுமையாகத் திரட்டப்பட்டுள்ளன. பாடசாலைகளுக்கு வகுப்பறை, தளபாடம் மற்றும் மலசலகூட வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதிலேயே அதிக கவனம் செலுத்தப்படும். ஏனைய வசதிகள் படிப்படியாக மேற்கொள்ளப்படவுள்ளன. இதற்கான ஆரம்ப நடவடிக்கைகளை மேற்கொள்ளவே நாம் இங்கு வந்துள்ளோம்" - என அவர் மேலும் தெரிவித்தார்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் திட்டமிடல் நிபுணர் எம்.திருச்செல்வம், உலக வங்கியின் சிரேஷ்ட பொருளியலாளர் டாக்டர் எச்.அத்துருபான, ஜி.ரி.இசற் நிறுவனத்தின் யாழ்மாவட்ட இணைப்பாளர் [illegible], கல்விச் சீர்திருத்தப் பணிப்பாளர் நாயகம் ஆர்.எஸ்.மெடகம, உலக வங்கியின் ஆலோசகர் பீற்றர் கொலன்சோ, மத்திய, மாகாண கல்வியமைச்சு அதிகாரிகள் ஆகியோர் நேற்று வந்த குழுவில் இடம்பெற்றுள்ளனர்.

இவர்கள் கல்வியியற் கல்லூரியில் அமைக்கப்படும் புதிய கட்டடத்தையும் பார்வையிட்டனர். தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, வசாவிளான் மகா வித்தியாலயம் ஆகியவற்றையும் சென்று பார்த்தனர். (ம-3-8)

## சமாதானத்துக்கான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்த மதிப்பீட்டின் பெறுபேறின் அடிப்படையிலேயே விமான நிலையத்தை விஸ்தரிப்பதா, இல்லையா? என்ற தீர்மானம் மேற்கொள்ளப்படும் என்றும் பிரதமர் அங்கு சுட்டிக்காட்டினார்.

உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்கவும் இச்சந்திப்பில் கலந்து கொண்டார். (ம-3-12)


GREEN INN RESTAURANT
கிறீன் இன் றெஸ்ரோறன்ஸ்
யாழ். வரும் உல்லாசப் பயணிகளுக்காக நவீன வசதிகள் அனைத்தும் ஒரே இடத்தில் அமைந்த காங்குமிடம், இன்றுமுதல் (28.08.2002) இல.60, கண்டி வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணத்தில் தனது சேவையை ஆரம்பிக்கின்றது என்பதை யாவருக்கும் மிகமகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றார்கள்.
இல.60, கண்டி வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல.: 021-2298, 021-3172. பக்ஸ்: 021-2298.
கிறீன் இன் றெஸ்ரோறன்ஸ், உரிமையாளர் & ஊழியர்கள்.
(7621)

"25 வருட காலமாக உயர்கல்வி மாணவர்களின் வழிகாட்டி"
THE COLLEGE OF DEGREE STUDIES
57/13 Stanley Rd, Jaffna.
புதியமாணவர்களை அனுமதித்தல்
கல்வியாண்டு 2003/2004
பேராதனை, யாழ்.பல்கலைக்கழகங்களின் பாடநெறிகளான
* கலை முதற்தேர்வு G.A.Q.
* வர்த்தக முதற்தேர்வு FIRST IN COMMERCE
க.பொ.த உயர்தரம் 3பாடங்களில் சித்தியடைந்தவர்கள், பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் பயிற்சிநெறியைத் தொடரலாம்.
விரிவுரைகள் 01.09.2002இல் ஆரம்பமாகின்றன.
விண்ணப்பங்கள் 30.08.2002வரை ஏற்றுக்கொள்ளப்படும்.
இயக்குநர்,
பட்டப்படிப்புகள் கல்லூரி
57/13 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

INSTITUTE OF INFORMATICS STUDIES
100, Clock Tower Road
ENGINEERING
QUANTITIES
SURVEYING
ARCHITECTURE
போன்ற பயிற்சி நெறிகளுக்குத் தகுதி பெற்ற மாணவ மாணவியருக்கு.
எமது வாழ்த்துக்கள்!
[illegible] உங்களுக்காக
AutoCAD with ENGINEERING DRAWING
விசேட பயிற்சி நெறி 31.08.2002 காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகிறது
இயக்குநர்,
IIS - யாழ்ப்பாணம்

எமது புதிய
வீடியோ CD வெளியீடு
பார்த்திபன், சவுந்தர்யா, மீனா நடித்த
இவன்
பிரதிகள் பிற்பகலில் பெற்றுக்கொள்ளலாம்.
ITN பலாலி வீதி, பரமேஸ்வராச் சந்தி.
(C/23322)

எமது புதிய
வீடியோ CD வெளியீடு
பார்த்திபன் நடித்த
* இவன் *
ஒரிஜினல் CD
* கார்மேகம் *
அபிடி எலக்ரோனிக்ஸ் யாழ்ப்பாணம்

திருமறைக் கலாமன்றம் வழங்கும்
ஸ்பாட்டகஸ்
(நாடகம்)
ஓகஸ்ட் 30,31 - செப். 1, 2002
(வெள்ளி, சனி, ஞாயிறு)
மன்ற அரங்கில் மாலை 6.45 மணி.
(C/23581)

MCS
324,பலாலிவீதி, யாழ்ப்பாணம் (பரமேஸ்வராச்சந்தி அருகே, மேல்மாடியில்)
இலவசக்கணனிப்பயிற்சி
ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அரச நிறுவனங்களை கணனிமயப்படுத்துவதில் பெரும்பங்காற்றிய எமது நிறுவனத்தினர் விசேட கணனிப்பயிற்சித்திட்டம் ஒன்றை முன்வைத்துள்ளார்கள்
பதிவுகள் 29.08.2002 இந்த முன் நேரில்


# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம் 03 - 01 - 1957

மறைவு 29 - 07 - 2002

## திருமதி தர்மகுலசிங்கம் கமலாதேவி (கமலா)

எங்கள் அன்புத் தெய்வமே! அம்மா!!
அன்பின் திருவுருவாய் அணையாத ஒளிவிளக்காய்
பண்புடனும் அன்புடனும் எம்மை வளர்த்து
என்றும் நாம் வாழ எமதுயிராய் நின்ற எங்கள் அம்மாவே!
இன்று எம்மைப் பரிதவிக்கவிட்டுப் பாதியிலே பறந்தோடிவிட்டீரே?
இன்று எம்மைக் காண எழுந்தோடி வரமாட்டீரோ?
கண்மணிபோல் எமைக்காத்த அம்மாவே!

உங்கள் ஆத்மா சாந்தியடைய என்றும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று (28.08.2002) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறுகின்ற எமது அன்புத் தெய்வத்தின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

190ஆம் கட்டை,
நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.

உங்கள் நினைவுகளில்
என்றென்றும் வாழ்ந்திடும்
குடும்பத்தினர்.

(7590)

# கண்ணீர் அஞ்சலி

யாழ். பாலர் கல்விக் கழகத் தலைவர்
சிவநேயர் திரு.இ.தவகோபால் அவர்களின் அன்புப் பாரியார்

## திருமதி த.தேவராணி

அவர்கள் காலமான செய்திகேட்டு மிகவும் கவலையுறுகின்றோம். அவரது பிரிவால் துயருறும் அவருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன், கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்கி அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

– ஹரன் ரெக்ஸ்ரைலஸ்.

(C/23321)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 28.08.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.